Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–10 | 24–06–2004 | வியாழக்கிழமை | ஓசை –127

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.

கணேசா நகையகம்
194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
123,பஜார் வீதி, வவுனியா.
(சி-9599)

# பாராளுமன்றத்தில் சனநாயகத்தை நிலைநாட்ட பிரேரணை சமர்ப்பிக்க எதிர்க்கட்சிகள் தீர்மானம்

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

**பாராளுமன்றத்தில் சனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முடிவெடுக் கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சித்தலைவர்கள் கூட்ட த்தி லேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.**

இக்கூட்டம் நேற்று நாடாளு மன்றக் கட்டடத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களில் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜாதிகஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி தமிழரசுக்கட்சி ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன இக்கூட்டத்தில் முக்கியமாக எதிர் காலத்தில் நடைபெறும் நாடாளு மன்றத்தில் சனநாயகத்தை நிலை நாட்டுவதற்கான பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முடிவெடுக்கப் பட்டுள்ளது.

மேலும் தமது முன்னெடுப் புக்களை கொண்டு செல்வதற்கும் எதிர்காலத்தில் நாடாளுமன்ற செயற்பாடுகளை உரியமுறையில் கொண்டு செல்வதற்கும் வலியு றுத்துவதற்கும் முடிவெடுத்திருக் கிறார்கள் இது தொடர்பாக பிரதம மந்திரியைச்சந்தித்து எழுத்து மூல கோரிக்கையை முன்வைப்பதற்கும் நேற்றையகூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது. (32)

## பல்கலை ஊழியர்கள் போராட்டம் சுமுக நிலையை அடைந்தது

கடந்த 14ஆம் திகதி முதல் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த வேலைநிறுத்தப்போராட்டம் சுமுகநிலையினை எட்டியிருக்கிறது. யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்று மாலை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகன தாஸ் தலைமையில் நேற்றுப் பிற பகல் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து சுமுகநிலை ஏற்பட்டிருப் பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தையில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் துடன், ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம் மற்றும் சர்வதேச தமிழீழ

(12ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம் சோதனைச்சாவடியில் -

## யாழ்ப்பாணம் சென்ற இளைஞரிடம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது

(புளியங்குளம்)

புளியங்குளம் சோதனைச்சாவடி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு மீளக் குடியேறச் சென்ற இளைஞர் ஒருவரிடம் இருந்து போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

கடந்த 16 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது. இளைஞனின் சப்பாத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 22 சிறிய போதைப் பொருள் பொட்டலங்கள் சோதனையின் போது கைப்பற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து மேற்படி இளைஞன் புளியங் குளம் காவற்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டார்.

## கருணாவை அழைத்துச்சென்ற விவகாரம் அலிசாஹிர் மௌலானா பதவி விலகினார்

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அலிசா ஹிர் மௌலானா தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்துள் ளார். அவர் தனது கடிதத்தை ரணில விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.

கருணாவை மட்டக்களப் பிலிருந்து கொழும்பிற்கு அழைத்து வந்தமை பற்றி எழுந்த சர்ச்சை காரணமாகவே எனது பதவியை இராஜினாமாச் செய்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஏற்படயிருந்த உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் நோக்குடனேயே நான் கொழும் பிற்குக் கருணாவை அழைத்து வந்தேன். இதனாலேயே இவ்விபரங் களைக் கட்சிக்குத் தெரிவிக்கவில்லை யெனத் தெரிவித்துள்ளார். ஆனால், கொழும்பில் கருணாவிற்கு சிறி லங்கா இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கியமைக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவளாக மாணவர்கள் 2 ஆவது நாளாகப் போராட்டம்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா வளாக மாணவர்கள் நேற்று 2-ஆவது நாளாக நிர்வாகத்துக்கு எதிரான போராட் டத்தை மேற்கொண்டனர்.

நேற்று வளாக முதல்வர் மாணவர்களைச் சந்தித்தும் பேச்சு வார்த்தையை நடத்திய போதும் பலன்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச கண்ணிவெடி ஒழிப்பு உடன்பாட்டில் சிறிலங்கா அரசு கைச்சாத்திட வேண்டும்

## வலியுறுத்தி யாழ்.இல் பேரணி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசாங்கம் கண்ணி வெடிகள் ஒழிப்பு ஒப்பந்தமான “ஒட் டோவா“ ஒப்பந்தத்தில் கைச்சாத் திடவேண்டும் என்பதை வலியுறுத் தியும் இவ் ஒப்பந்தத்தில் இதுவரை காலமும் சிறிலங்கா அரசாங்கம் இதுவரை கைச்சாதிடாமையைக் கண்டித்தும் யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முன்றலில் இருந்து ஆரம்ப மான ஒரு பேரணியும் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி முன்ற லில் இருந்து ஆரம்பித்த மற்று மொரு பேரணியுமாக இரு பேர ணிகள் கோப்பாய்ப் பிரதேச செயலகம் நோக்கி நகர்ந்தன.

கோப்பாய்ப் பிரதேச பொது அமைப்புக்களின் ஏற்ப்பாட்டில் இடம்பெற்ற இப்பேரணிகளில் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், அரச அதிகாரிகள் என ஆயிரக்கணக்கானோர் பங்கு பற்றி யிருந்தனர்.

இதன்போது யாழ்: குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா படையினர் தமது பாதுகாப்புக்கருதி மக்கள் வாழ்விடங்களை அண் மித்து புதைத்து வைத்துள்ள மிதி வெடிகளை அகற்றுவதற்கு அனுமதிக்காமைக்கு ஆட்சேபிக் கும் விதமாகவும், தமிழர் வாழ் தாயகப் பகுதிகளில் படையினரால்

(12ஆம் பக்கம் பார்க்க)





கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம்

யுனிசெப் வெண்புறா - வன்னி

## வரிவிளம்பரம்

**ஆசிரியர் போட்டிப் பரீட்சை**

**யூலை 24**

துரித வகுப்புக்கள் கிளி/புதிய உயர்கல்வி நிலையத்தில் (பழைய புகையிரத நிலைய வீதி) நடைபெறுகின்றது. சனிக்கிழமை 1.00 மணி. (26-06-2004) (4731)

## விவசாயிகளுக்கான ஓய்வூதியத்திட்டம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு, விவசாய, கூலி வேலை செய்பவர்களிற்குமான ஓய்வூதியத்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான மேலதிக விபரங்களை அந்தந்தப் பகுதி கிராம சேவகரிடம் பெற்றுக் கொள்ளலாம் எனச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. (15)

## இடம்பெயர் சேவை பிற்போடப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)
கடவுச்சீட்டு வழங்குவதற்காக இன்றும் நாளையும் நடைபெறவிருந்த இடம்பெயர் சேவையானது போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாமையின் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதென கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டு வழங்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும், கடவுச்சீட்டு பெற விரும்புவோர் தங்கள் பெயர்களையும் அந்தந்த பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளும்படி வேண்டியுள்ளார். (சோ)

# பலாலி கடற்பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் மீன்பிடிக்க வேண்டாம் என வலியுறுத்து

பலாலி இராணுவப்படைத் தளத்தை அண்மித்த பகுதிகளில் படையினரால் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கும் கடற்பாதுகாப்பு வலயத்தை அண்மித்த பகுதிகளில் கடற்றொழிலில்ஈடுபட அனுமதிக்க வேண்டாம் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்சங்க சமாசத்தினரிடம் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்சங்க பிரதிநிதிகளை வடமராட்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் வைத்துச்சந்தித்த போதே கண்காணிப்பு குழுவினர் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

பலாலி படைத்தளத்தின் கடல் வலய பாதுகாப்பு பிரதேசத்தை அண்மித்து மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவது தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைகிறது இதனால் படையினருக்கும் மீனவர்களுக்கும் இடையே விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்வாய்ப்புள்ளதாக படையினர் தெரிவித்திருப்பதை சுட்டிக்காட்டியே கண்காணிப்புக் குழுவினர் இதனை வலியுறுத்தியுள்ளனர். (33)

### உயரதிகாரிகளின் போக்கினால்

# கால்நடைக் கருச்சிதைவைக் கட்டுப்படுத்தும் கருவிகள் வன்னிக்கு எடுத்துவருதல் தாமதம்

(ஒட்டுசுட்டான்)
வன்னிப் பிரதேசத்தின் கால்நடைகளில் ஏற்படும் கருச் சிதைவு நோய் உள்ளது எனக் கடந்த ஆறு மாதங்களிற்கு முன்னர் ஆராயப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நோய்களைக் கட்டுப்படுத்தும் கருவிகளைக் கொண்டுவர எடுத்த முயற்சிகள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மத்திய அரசின் உயர் அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வடபகுதி கால்நடைகளின் தொற்று நோய் புலனாய்வுப் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், உயர் அதிகாரிகள் வாகன சாரதி, வாகனங்கள் இல்லை எனக் கூறி இழுத்தடிப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.(05)

# உள்ளூர் அ.சா.நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்குப் பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)
கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும், சர்வதேச கெயர் நிறுவனமும் இணைந்து நடாத்தும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்களுக்கான அடிப்படை தொழில் நுட்பப்பயிற்சிப்பட்டறை நேற்று கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையத்தில் ஆரம்பித்துவைக்கப்பெற்றது.

இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை தலைமையில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு நடைபெற்ற பயிற்சிப்பட்டறை ஆரம்ப நிகழ்வில் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொண்டு பயிற்சிப்பட்டறையினை ஆரம்பித்து வைத்தார்.

இன்றும், நாளையும் மேற்படி பயிற்சிப்பட்டறை தொடர்ந்து நடைபெறவுள்ளதுடன் கட்டடம் பற்றிய அடிப்படை அறிவு, நீர்ப்பாசன வேலைகள் மரவேலை, வீதி பாலமமைத்தல், போன்றவற்றிற்கான பயிற்சிப்பட்டறை வகுப்புக்கள் இம்மூன்று நாட்களும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## வகுப்புகள்

தேசிய கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படும் கிளிநொச்சி பிராந்திய நிலைய பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி 2 பாடநெறியைப் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான வகுப்புகள் 26,27ஆம் திகதிகளில் வழமையான இடத்தில் வழமையான நேரத்தில் நடைபெறும். அன்றைய தினங்களில் பரீட்சைக்கான விண்ணப்பம் நிரப்புதல் சமபந்தமாகவும் கலந்துரை யாடப்படும் என சிரேஷ்ட விரிவுரையாளர் கி. சின்னராசா அறியத் தருகிறார்.

## செயலமர்வு

(அலுவலகசெய்தியாளர்)
சமூகப்பணி மீளாய்வு செயலமர்வு எதிர்வரும் 29 ஆம் திகதி பகல் 11.00மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

திட்டமுகாமையாளர் அ.நகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி செயலமர்வானது கடந்த ஆறுமாதகால சமூகப்பணி செயற்திட்டத்தின் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கான மீளாய்வும், அதன் முன்னேற்றம் பற்றிய தாகவே அமையும் என சமூகப்பணி சிறுவர் நலன் திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். . (சோ)

# தலையில் காயமடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
தலையில் காயத்துடன் மயக்கமடைந்த நிலையில் யாழ்.மத்திய பேருந்து நிலையப்பகுதியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டு யாழ்.போதனா மருத்துவ மனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்ட இளைஞர் நேற்றுக் காலை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் யாழ்.கஸ்தூரியார் வீதியைச்சேர்ந்த ந.தயாளன் (வயது23) என்பவர் என உறவினர்களால் இனம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை மது அருந்தியதினாலேயே பிரஸ்தாப இளைஞன் தரையில் வீழ்ந்து மயக்கமடைந்திருக்கலாம் என்றும் இவர் யாழ்.மத்திய பேருந்து நிலையப் பகுதியில் உள்ள கடை ஒன்றின் உரிமையாளர் எனவும் தெரியவருகிறது. (32)

# மன்னாரில் விகாரை அமைக்க நேற்று அடிக்கல் நாட்டல்

மன்னாரில் நேற்று பௌத்த விகாரை ஒன்றிற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் ஒன்று இடம் பெற்றது. இதற்கு வண. அல் பே தம்பமெத்தினதேரர் தலைமை தாங்கினார்.மன்னார் அரசாங்க அதிபர் விசுவலிங்கம் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் மற்றும் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பலர் இந்திகழ்வில் பங்கு கொண்டனர். 1983ம் ஆண்டு இவ் விகாரை அழிக்கப்பட்டதன் பின் தற்சமயம் இவ் விகாரைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது என குறிப்பிடத் தக்கது. (மி)

# மேஜர் அதிரதன் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா

(மல்லாவி)
துணுக்காய் ஆலங்குளம் பகுதியில் அமைந்த மேஜர் அதிரதன் முன்பள்ளிச் சிறார்களினது திறனாய்வுப் போட்டி நிகழ்வு கடந்த 20ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் அபிவிருத்திக்குழுத் தலைவர் வீ.தவராசா தலைமையில் இடம் பெற்றது.

தமிழீழத் தேசியக்கொடியியை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் போராளி கலையரசி ஏற்றி வைத்தார். மாவீரன் அதிரதனின் திருவுருவப்படத்திற்கு அவருடைய தாயார் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார்.

ஆசியுரையை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஆலங்குளம் மாவீர்துயிலும் இல்லபோராளி செல்விஅ. கோமதி நிகழ்த் தி னார் திறனாய்வுப்போட்டி முடிவு பெற்றதும் வெற்றிபெற்ற சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டது. மேற்படி நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச பிரதான களஞ்சியம் திறப்பு

பரந்தனில் போரினால் முற்றாகச் சேதமடைந்திருந்த கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கத்தின் பிரதான களஞ்சியம் கிளி/அரச அதிபர் நிதியுதவித்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு உலக உணவுத்திட்ட மாவட்டக் களஞ்சியமாக இயங்குவதற்காக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. காலை 10 மணிக்கு கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க தலைவர் மா.நடராசா தலைமையில் திறப்புவிழா ஆரம்பமானது.

நிகழ்வில் மங்கல விளக்கை கிளி/மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் மாவட்ட நிர்வாகசேவை கூட்டுறவு இணைப்பாளர் மயூரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து உணவுக்களஞ்சிய மண்டபத்தை கிளி/அரச அதிபர் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். இந் நிகழ்வில் கரைச்சி பிரதேசசபை உதவி ஆணையாளர் கிளி/மாவட்ட நிர்வாகசேவை கூட்டுறவு இணைப்பாளர் கமநலசேவை உதவி ஆணையாளர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (14)


## நீங்காத 31ஆம் நாள் நினைவில்...

மடியில் முளையாக 25 05 1936



மண்ணில் விதையாக 25 05 2004

**அமரர் நாகலிங்கம் சண்முகம்**

(முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்)

கனகபுரம், கிளிநொச்சி.

மாதகல் மடியில் பூத்த மாதவனே...
மக்களின் சேவைசெய்த சேவகனே,
கனகபுரம் மண்ணில் சிறந்த நாயகனே...
கடவுளோடு கலந்துவிட்ட தூயவனே...
எம்
வீட்டின் விளக்கணைந்து...
திங்கள் ஒன்று முடிந்தது...
தந்தையே நீங்களின்றி...
சிந்தையெல்லாம் மடிந்தது...
சிறப்புடனே வாழவைத்து
சிரித்திருந்த தெய்வமே.
சிதறுகிறோம் உம்பிரிவால்
தினமழுது நாங்களே
உதிர்கிறது உங்களது பாதத்தில்
எம் கண்ணீர்ப் பூக்களே...

எம் தெய்வத்தின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்.

குடும்பத்தினர்.

64. கனகபுரம் கிளிநொச்சி. (4616)



எட்டு பிரித்தானிய மாலுமிகளை ஈரான் கைது செய்துள்ள நிலையில் தென் ஈராக்கில் ஈராக்கிய மாலுமிகளுடன் ரோந்து செல்லும் பிரித்தானியக் கடற்படையினர்.



பிரிட்டிகஷ் கொலம்பியாவில் திமிங்கிலங்களைப்பிடிக்க வந்த படகுகளை விரட்டியடிக்கும் மீன்பிடித் திணைக்களத்தினர்.

# கடத்தப்பட்ட தென்கொரிய வர்த்தகர் ஈராக் தீவிரவாதிகளால் கொலை

## –ஐ. நா. பாதுகாப்புச்சபை கண்டனம்

(பாக்தாத்)

**ஈராக்கில் தௌபிட் வாகல் ஜினட் என்ற இஸ்லாமிய குழுவினால் கடத்திச் செல்லப்பட்ட தென்கொரியாவைச் சேர்ந்த வர்த்தகரான கிங்சூனிலை கடத்தற்காரர்கள் நேற்று முன்தினம் கொலை செய்துள்ளனர். இதற்கு ஐ.நா பாதுகாப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.**

கடந்த 05 நாட்களாக இவரைக் கடத்திச் சென்று வைத்திருந்த கடத்தற்காரர் ஈராக்கிற்குப் படைகளை அனுப்பும் எண்ணத்தை தென்கொரியா கைவிடாவிட்டால் 24 மணித்தியாலயத்திற்குள் அவரை சிரச்சேதம் செய்வோம் என கடந்த திங்கட்கிழமை எச்சரித்திருந்தனர்.

ஈராக்கில் அமெரிக்க இராணுவத்திற்குப் பொருட்களை விநியோகித்து வருகின்ற கொரிய நிறுவனம் ஒன்றில் மொழிபெயர்ப்பாளராக இவர் தொழில் புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்கொரிய சனாதிபதி றோமோ கியூன் தொலைக்காட்சியில் இவரின் படுகொலை சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கையில்

இப்படுகொலையையிட்டு நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். தீவிரவாதிகளின் இச்செயல் மனிதாபிமானற்றது. எமது நாடு இத்தகைய பயங்கரவாத்திற்கு தலை சாய்ப்பதை விட மேலும் துருப்பினரை ஈராக்கிற்கு அனுப்புமென அவர் சூளுரைத்துள்ளார்.

இப்படுகொலைக்கு ஐ.நாடுகள் பாதுகாப்புச் சபையும் தீவிர கண்டனம் தெரிவித்துள்ளது. சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாதுகாப்புச் சபையின் தற்போதைய தலைவர் கேட்டுள்ளார்.

### 57 ஆக உய்ர்வு

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இங்குஸ்தியா பகுதியில் நேற்றுமுன்தினம் செச்சினிய தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் தொகை 57ஆக அதிகரித்துள்ளது.

இதில் பொலிசார் 47 பேரென ரஷ்யா அறிவித்துள்ளது.

# கொங்கோ விவகாரங்களில் அயல்நாடுகள் தலையிடவேண்டாம்

## -ஐ.நா.சபை கோரிக்கை

கொங்கோவில் அரசிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற இராணுவத் தளபதிகள் கிளர்ச்சி நடவடிக்கையை மேற்கொள்வதால் அந்நாட்டின் விவகாரங்களில் தலையிடவேண்டாமென ருவாண்டா, உகண்டா, புறூண்டி ஆகிய நாடுகளுக்கு ஐ.நாடுகள் பாதுகாப்புச்சபை நேற்று முன்தினம் எச்சரித்துள்ளது.

15 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் நடவடிக்கை முடிவடைந்த பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொங்கோவின் அயல் நாடுகள் அந்நாட்டு அரசுடன் தொடர்புகொண்டு தேவைப்படுகின்ற உதவிகள் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

### விசாரணை

(பாக்தாத்)

ஈராக்கில் அபுகிறாய் சிறையில் கைதிகளை கொடுமைப்படுத்திய மூன்று அமெரிக்காப் படை அதிகாரிகள் மீது விசாரணை நடைபெற்று வருவதாக அமெ. செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவ நீதிமன்றத்தில் இவ்விசாரணை நடைபெற்றுவருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

# தமக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த 22 ஆசிய நாடுகள் முடிவு

## -பிரகடனமும் வெளியிடப்பட்டது

(கொழும்பு)

ஆசியாவின் நலனுக்காக தமக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு ஆசிய ஒத்துழைப்பு அமைப்பைச் சேர்ந்த 22 நாடுகள் இணக்கம் கண்டுள்ளன.

இந்த அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொண்ட மூன்று நாள் மாநாடு நேற்று சீனாவில் நிறைவு பெற்றுள்ளது.

இம் மாநாட்டின் முடிவில் ஆசிய ஒத்துழைப்பிற்கான பிரகடனம் வெளியிடப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சாசனத்திலும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரகடனங்களிலும் கூறப்பட்ட அடிப்படைக் கொள்கைகளில் தமக்குள்ள அர்ப்பணிப்பை 22 ஆசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் வலியுறுத்தினர்.

சமத்துவம் பரஸ்பர தன்மைகள் படிப்படியான முன்னேற்றம் என்பனவற்றின் அடிப்படையில் நிலையான சமாதானமும் சுபீட்சமும் நிலவக் கூடிய புதிய ஆசியாவைக் கட்டி எழுப்புவதற்காக சகல துறைகளிலும் ஒத்துழைப்பை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இதே வேளை ஆசியான் அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் ஜகார்த்தாவில் அடுத்த வாரம் முக்கிய கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

பாதுகாப்புப் படை ஒன்றை அமைப்பது பற்றி இந்தோனேசியா சமர்ப்பித்த ஆலோசனை இம் மாநாட்டின் போது ஆராயப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க, அவுஸ்திரேலிய, ஐரோப்பிய நாடுகள் என்பனவற்றுடன் 10 ஆசிய நாடுகளும் ஜகார்த்தாவில் அடுத்த மாதம் இரண்டாம் திகதி பாதுகாப்பு சம்பந்தமான வருடாந்த மாநாட்டை நடாத்தவுள்ளன.

### இஸ்ரேல் தாக்குதல்

(ஜெருசலேம்)

தெற்கு லெபனானிலுள்ள ஹிஸ்புல்ல தீவிரவாதிகளின் முகாம்கள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று முன்தினம் தாக்குதலை நட்த்தியுள்ளன.

## -வடகொரியாவுடனான-

# அணுவாயுத பிரச்சினையைத் தீர்க்க அமெ.யோசனை முன்வைப்பு

(வோஷிங்டன்)

வடகொரியா சம்பந்தமான 06 சுற்றுப்பேச்சு வார்த்தைகளில் அணுவாயுத நெருக்கடிகளைத் தீர்க்கும் நோக்கில் அமெரிக்கா ஓர் யோசனையை முன்வைத்துள்ளது. முன்னேற்றம் காணாவிட்டால் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளின் நம்பகத்தன்மை பற்றியகேள்வி எழலாம் என ஜப்பான் எச்சரித்த பின்னர் அமெரிக்கா இதனை வலியுறுத்தியுள்ளது. வடகொரியா தமது அணுவாயுத திட்டங்களை கைவிடுமானால் அதற்கு வழங்கக்கூடிய நிவாரணங்கள் பற்றி இவ்யோசனையில் கூறப்பட்டுள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது. மூன்றாவது சுற்றப் பேச்சுவார்த்தை அடுத்த ஒரு சில தினங்களில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயணிகள் படகு மஞ்சள் ஆற்றில் முழ்கியது

## உல்லாசப் பயணி ஒருவர் பலி; 43 பேரைக்காணவில்லை

(பிஜிங்)

சீனாவில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற படகொன்று கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் 43 பேர் காணாமாற் போயுள்ளனர்

சீனாவில் மஞ்சள் ஆற்றிலே இவ் விபத்து நேற்று முந்தினம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது (69) வெளிநாட்டு உல்லாச பயணிகளுடன் சென்ற இப் படகு கடும் காற்றுக் காரணமாக

கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் மூழ்கியதாக தெரியவருகிறது. இச் சம்பவம் இடம்பெற்றதைத் தெடர்ந்து மீட்புப் பணியாளர்கள் அங்கு சென்று 20 உல்லாசப்பயணிகளை மீட்டுள்ளதுடன் சடலம் ஒன்றையும் மீட்டுள்ளனர். தொடர்ந்து இவர்களை மீட்கும் நடவடிக்கையில் மீட்புப் பணியாளர்கள் ஈடுப்பட்டுள்ளனர்.

# ஈராக் இடைக்கால பிரதமருக்கு தீவிரவாதிகள் எச்சரிக்கை

(பாக்தாத்)

ஈராக்கில் இஸ்லாமிய தீவிரவாதிகள் தமது இடைக்கால பிரதமர் இயாட் அல்லாவியை படுகொலை செய்யப்போவதாக எச்சரித்துள்ளார். தென்கொரிய பணயக் கைதியை தாம் சிரச்சேதம் செய்துள்ளதாக அறிவித்த சில மணித்தியாலயத்தின் பின்னர் இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சர்வதேச நிதிமூலம் விலங்குகளைக் பேனும் அமைப்பினரால் திமிங்கில குட்டிவடிவிலான உருவங்களை ஏந்தி அவற்றை வேட்டையாடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.



சூடானில் யுத்தத்தால் இடம் பெயர்ந்த பெண்ஒருவர் றியாத் அகதிமுகாமில் காணப்படுகிறார்.

# சுற்றாடல் மாதத்தை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் கருத்தரங்கு

**சுற்றாடல் மாதத்தை முன்னிட்டு மாவட்ட மட்டக் கருத்தரங்கு நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு கிளி.பண் பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.**

இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளி. மாவட்டப் பொறுப்பாளர் மு.செந்தில் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து, மங்கல விளக்கினை அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், நியாப் திட்டப் பிரதிப் பணிப்பாளர் வினோதராஜா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனபாலசிங்கம் , மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், வைத்தியகலாநிதி சத்தியமூர்த்தி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனைத்தொடர்ந்து அரசாங்க அதிபர் தலைமையில் கருத்தரங்கு நிகழ்வுகள் நடைபெற்றன. கருத்துரைகளை நீர்ப்பாசனத்தில் சூழலின் பங்கும், நீர்மாசடைதலும், அவற்றிற்கான தீர்வு முறைகளும் என்ற தலைப்பில் நியாப் திட்டப் பிரதிப் பணிப்பாளர் வினோதராஜாவும் விவசாயச் சூழலின் பங்கும், மாசடைவும், அவற்றிற்கான தீர்வு முறைகளும் என்ற தலைப்பில் விவசாயப் போதனாசிரியர், நா.செல்வராசாவும், சூழலும், நீரும், நீர் மாசுக்களும், அவற்றிற்கான தீர்வுகளும் என்ற தலைப்பில் செல்வி கு.மணிமேகலையும்; பொலித்தீன் பாவனையும், சூழல் மாசடைவும் என்ற தலைப்பில் பொதுச் சுகாதார பரிசோதகர் சோ.இரவிச்சந்திரனும் கருத்துக் கட்டுரைகளை வழங்கினார்கள்.



இந் நிகழ்வில், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், கமக்காரர் அமைப்புப் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் என பெருமளவானோர், கலந்து கொண்டனர். இறுதியில் நன்றியுரையினை மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளர் பி.மத்தியாஸ் வழங்கினார். (தீ,ச)

# அம்பாறை நாவிதன்வெளிப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட நாவிதன்வெளிப்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் விழிப்பூட்டல் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதி ரமணன் கலந்து கொண்டு உரையாற்றுகையில் "கடந்த காலங்களிலே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடந்த கசப்பான சம்பவங்கள் அனைத்தையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். எதிர்காலத்தில் தமிழ் மக்கள் அனைவரும் எமது இன விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு விடுதலைப் போரையும், மதித்துச் செயற்பட வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் நாவிதன்வெளிப் பிரதேச அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறுவர் உரிமை தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு

(முல்லைத்தீவு)

யூனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் சிறுவர் உரிமை தொடர்பான செயலமர்வு சகல பிரதேசங்களிலும் நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை செயலமர்வு நடைபெறும் இதில் 30 பயிற்சியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் முன்பள்ளி ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள், சமூகக்குழு அங்கத்தவர்கள ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமைகுறிப்பிடத்தக்கது (20)

## குடிநீருக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

பூநகரி, ஆலங்கேணி, நல்லூர், பகுதிகளில் குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. குடி நீருக்கு என்று கொள்கலன்கள் உள்ள போதும் அவற்றில் குடிநீர் இல்லாததால் மக்கள் குடி நீருக்காகத் தூர இடங்களுக்கு அலைவதைக் காணக்கூடியதாக உள்ளது. (15)

# மட்டு. கொலைகள் தொடர்பாக அடையாள அணிவகுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற கொலைகள் மற்றும் கொலை முயற்சிகள் தொடர்பாக நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்பு ஒன்று நடைபெற்றுள்ளது. மட்டக்களப்பு பொலிசார் சமர்ப்பித்த விசேட அறிக்கையின் பிரகாரம் நடைபெற்ற இந்த அடையாள அணி வகுப்பில் அண்மையில் பொலிசாரால் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட மூன்று பேர் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால் ஆஜர் செய்யப்பட்ட எவரும் கொலை மற்றும் கொலை முயற்சி தொடர்பாக அடையாளம் காட்டப்படவில்லை என மட்டக்களப்பில் இருந்துகிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அக்கராயன், பூநகரி வைத்தியசாலைகளில் சீரான வைத்தியசேவைகளைப் பெற ஏற்பாடு

## -பிரதி மா.சு.சே. பணிப்பாளர் தகவல்

அக்கராயன் வைத்தியசாலையில் ஒரு வைத்திய அதிகாரியும், ஒரு உதவி வைத்திய அதிகாரியும், ஒரு பல் வைத்தியரும் கடமையாற்றுகின்றனர். ஆகவே அப்பகுதியைச் சூழவுள்ள மக்கள்அக்கராயன் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைபெறலாம். பூநகரி கட்டம்-1 வைத்தியசாலைக்கு ஒரு வைத்திய அதிகாரி செவ்வாய், புதன், வியாழன், ஆகிய தினங்களில் சென்று பார்வையிடுகின்றார். அத்துடன் அங்கு பல்வைத்திய உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளதால் விரைவில் பல் வைத்தியமும் நடைபெறும். எனவே சிகிச்சை பெறும் மக்களும், கிளினிக் செல்பவர்களும் அங்கு சென்று சிகிச்சை பெறலாம்.

அத்துடன் நீண்ட தூரங்களில் இருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு வந்து சிரமப்படாமல் அப்பகுதி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறலாம் என கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

# கொரிய மருத்துவ நிபுணர் குழுவின் இலவச மருத்துவ சிகிச்சைமுகாம்

(திருமலை)

கொரிய நாட்டு தேசிய மருத்துவ நிபுணர் குழுவினரின் இலவச சிகிச்சை முகாம் திருகோணமலை மாவட்டத்தில் கப்பற்றுறையில் அமைந்துள்ள மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் ஜுலை 5,6,7,8,9 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறும் என்று வடக்கு- கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் திருமதி. இந்திராணி தர்மராஜா அறிவித்துள்ளார்.

சுதேச மருத்துவ அமைச்சு திருமலை அரச. அதிபரின் அனுசரணையுடன் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்கிறது. இவ்வைத்திய முகாமில் நாட்பட்ட பலவிதமான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். முக்கியமாக பாரிசவாதம், முதுகுத்தண்டு நோய்கள், மூட்டு வலி, கழுத்து, நாரிப்பிடிப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், சரும நோய்கள், உயர்குருதியமுக்கம், நீரிழிவு நோய், நித்திரையின்மை, மன அழுத்தம் போன்ற பலவிதமான நோய்களுக்கும் சிகிச்சை பெற விரும்புவோர், வடக்கு கிழக்கு மாகாணசபை, திருமலை மற்றும் பிரதேசசபை, நகரசபைகளின் கீழ் இயங்கும் சகல இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஜுலை 1ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் பதிவு முறைப்படி சிகிச்சை பெறும் திகதிகள் அறிவிக்கப்படும் என்றும், மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (25)

# பழவகைகளுக்கு இரசாயனக் கலவை; விற்பனை செய்தவர் மீது நடவடிக்கை

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதியில் மாம்பழத்திற்கும், வாழைப்பழத்திற்கும் இரசாயனக் கலவை விசிறப்பட்டு விற்பனை செய்து வந்த பழக்கடை உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனித உணவுத்தேவைக்காக பயன்படுத்தக் கூடாத இரசாயனப் பொருளை மாம்பழம், வாழைப் பழம் போன்ற பழவகைகளை பழுக்கவைப்பதற்குப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் இக் கலவை விசிறப்பட்டு விற்பனைசெய்யும் பழவாணிப உரிமையாளர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் எனவும் முல்லை. மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இரசாயனக் கலவை விசிறப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பழத்தினால் மக்கள் மயக்கமுற்ற சம்பவமும் அவதானிக்கப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது. (19)

# வருடாந்த திருக்குறள் தேர்வு 27-ஆம் திகதி நடைபெறும்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் ஆண்டு தோறும் நடாத்தப்பெறும் திருக்குறள் தேர்வு இந்த ஆண்டு 2004.06.27ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு 30 பள்ளிகளில் நடைபெறும். இதற்கான நுழைவு அட்டைகள் உரிய பள்ளிகளுக்கு அனுப்பப்பெற்றுள்ளன. நுழைவு அட்டைகள் கிடைக்காத பள்ளிகளை உடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழ்ச்சங்கச் செயலர் அறிவித்துள்ளார்.

மேலும் கண்டாவளைக் கோட்டத்தில் பிரமந்தனாறு உ.நி.ப,கலவெட்டித்திடல் நாகேசுவரா, நம்பிராசபுரம், தருமபுரம் எண்1 அ.த.க பள்ளிகளிலிருந்து தோற்றும் மாணவர்களுக்கு தருமபுரம் உ.நி.பள்ளியிலும், வேரவில் உ.நி.ப. மாணவர்களுக்கு கிராஞ்சி அ.த.க. பள்ளியிலும், பூநகரி உ.நி.ப. மாணவர்களுக்கு நல்லூர் உ.நி.பள்ளியிலும்,பரந்தன் அ.த.க.பள்ளி மாணவர்களுக்கு பரந்தன் இந்து உ.நி.பள்ளியிலும், இராமநாதபுரம் கிழக்கு,கல்மடுநகர் மாணவர்களுக்கு இராமநாதபுரம் உ.நி.பள்ளியிலும் தேர்வு நடைபெறும். வேண்டுகை அனுப்பிய ஏனைய பள்ளி மாணவர்களுக்கு அந்தந்த பள்ளியில் நடைபெறும் என தமிழ்ச்சங்க செயலாளர் அறியத்தந்துள்ளார்.

# அடையாள அட்டை காணாமல் போனவர்களின் கவனத்திற்கு

பின்வருவோர்களினது தேசிய அடையாள அட்டைகள் கிளிநொச்சி யாழ்.சாலையில் அமைந்துள்ள ஈழநாதம் பணிமனைக்குக் கிடைத்துள்ளன. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேதமாணிக்கம் ஜேம்ஸ்- திருநகர் கிளி, ஆ.துரைராஜா சுரேஸ்- அங்குவாதோட்டை, தேவதாசன் ஜுட்ஜெயந்திரா- வவுனியா, பாக்கியலட்சுமி கனகசபை- கோப்பாய், சின்னத்துரை நாகேஸ்வரி - மீசாலைதெற்கு, மயிலு வீரசிங்கம் - கோப்பாய் வடக்கு, சிவராசா பாலஸ்ரீ- வட்டக்கச்சி, கிட்ணன் கருணாகரன் -கரவெட்டி, செல்வராசா செல்வரஞ்சன்- நீர்வேலி, கந்தையா தவலிங்கம் வேலணை கிழக்கு, மாணிக்கம் தங்கராசா - காரைநகர், அந்தோனி சூசை - உரும்பிராய், நல்லையா சகுந்தலாதேவி - வண்ணார்பண்ணை, சுப்பையா சந்தனம் -மிருசுவில், செல்லப்பா விஜயராசன், நல்லூர்- யாழ்ப்பாணம், சின்னத்தம்பி கனகசபை- கோப்பாய் தெற்கு, அமலதாசன் மரியநாயகி- தெல்லிப்பளை, பொன்னுத்துரை சுரேந்திரன், உரும்பிராய், வேலாயுதம் கலையரசி- ஓமந்தை, நாகலிங்கம் நேசரட்ணம்- முள்ளியவளை.



புதுக்குடியிருப்பில் உள்ள முல்லை. மாவட்ட வைத்தியசாலையில், இடப்பற்றாக்குறை காரணமாக மர நிழலின் கீழ் இடம் பெறும் சிறுவர்களுக்கான கிளினிக்கையே படத்தில் காண்கிறீர்கள். (படம்:- தவரட்ணம்)

# ஒட்டாவா உடன்படிக்கையின்படி குடியிருப்புப் பகுதிகளில் கண்ணிவெடி புதைப்பதை சனாதிபதி தடைசெய்ய வேண்டும்

## கோப்பாயப் பிரதேச மக்கள் ஊர்வலத்தின்பின் சனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

**ஒட்டாவா உடன்படிக்கையின்படி மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்படுவதைத் தடை செய்யுமாறு கோரும் மனுவொன்று கோப்பாயப் பிரதேச மக்களால் சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.**

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரத்தையொட்டி நேற்று கோப்பாய்ப் பிரதேச மக்களால் நடாத்தப்பட்ட ஊர் வலத்தின் போது சனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

அதில் "யூன் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடி விழிப்புணர்வுக்கல்வி வாரம்" மிகப் பெரிய அளவில் அனுஷ்டிக்கப்படுவதை தாங்கள் அறிவீர்கள்.

கண்ணிவெடிகள் எமது வீடுகள், பயிர்ச்செய்கை நிலங்கள் உட்பட ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் மற்றும் கால்நடைகள் என்பனவற்றில் அதிகபாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. மேலும் எமது சொந்த நிலம் கண்ணிவெடிகளால அழிக்கப்பட்டுள்ளது.

போர் நின்றுபோயுள்ள போதிலும கண்ணிவெடிப் பாதிப்பினால் மரணம் இன்னும் உள்ளது. பொது மக்கள் தங்கள் நிலத்தில் விருப்பப்படி சுதந்திரமாக வாழ முடியாதுள்ளது.

கோப்பாயப் பிரதேச செயலர் பிரிவு மக்களாகிய நாங்கள் ஒட்டாவா உடன்படிக்கையின்படி கண்ணிவெடிகள் விதைக்கப்படுவதை தடைசெய்வதற்காக 2004-யூன் மாதம் 23ஆம் திகதி ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளோம் இதன் மூலம் எமது உணர்வுகளை சர்வதேசசமூகத்திற்கு தெளிவாய்ச் சொல்லவிரும்புகிறோம்.

தங்களுடைய ஆலோசனையின் கீழ்பின்வரும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

I எமது நிலங்கள் விடுதலை பெறுவதற்கு கண்ணி வெடியகற்றும் உடனடி நடவடிக்கை துரிதப் படுத்தப்படவேண்டும்.

II ஓட்டாவா உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

III கண்ணிவெடியகற்றலின் மூலம் உயிர் வாழ்தலை உறுதி செய்தல் வேண்டும்.

IV எமது இளம் சந்ததிக்கு தடையையேற்படுத்தக் கூடாது.

V கண்ணிவெடிகளால் உயிரிழந்த, மற்றும்காயமடைந்தோருக்கு உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்துமயானம் புனரமைப்பு

வடமராட்சியில் உள்ள பருத்தித்துறை கடற்கரை இந்து மயானம் 5இலட்சம் ரூபாசெலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. நீண்டகாலமாக புனரமைப்புகள் ஏதும் அற்றநிலையில் காணப்பட்ட இம்மாயானத்தை புனரமைக்கும் நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டு வருகின்றது. (33)

## யாழ்.மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு 26 இல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டமனிதநேய அமைப்புக்களின் பிரதி நிதிகளுடனான முக்கிய சந்திப்பு ஒன்று எதிர் வரும் 26ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றிய செயலகத்தில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றிய நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீவன் தியாகராஜா உட்படப் பலரும் கலந்துகொள்வர்.

இதில் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்களுக்கு உள்ள மனித உரிமைகள் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்தும் உரியநடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படும். (33)

## - யாழ். மாவட்டத்தில் -

## சட்டவிரோதமாக மதுபானம் விற்போர் மீது கிராமசேவகர் ஊடாக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்வோர் மீது கிராம சேவையாளர்களூடாக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் சட்டவிரோத மதுபான விற்பனைகளும், போதைப்பொருட் பாவனைகளும் அதிகரித்து வருவதால் பல்வேறு சமூகப்பிரச்சினைகளும் அதிகரித்திருக்கின்றன.

எனவேஇதனைக் கருத்திற்கொண்டே யாழ்.குடாநாட்டில் உள்ள கிராமசேவகர்களூடாக சட்டவிரோத மதுபான விற்பனையாளர் மீது கடும் சட்டநடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(33)

## யாழ்.மாவட்டத்தில் வெடிபொருட்கள் அகற்ற 80 இடங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

யாழ். அரச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வெடிபொருள்தொடர்பான கூட்டத்தில் யாழ்.குடாநாட்டில் முக்கியமாக வெடிபொருட்கள் முன்னுரிமை அடிப்படையில் அகற்றப்பட வேண்டிய 80இற்கும் மேற்பட்ட இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. என யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர்சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் டிசம்பர் மாதம் நடைமுறைப் படுத்தப்படும் இதற்குரிய வேலைகளை டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் கலோறெஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் சிறிலங்காப் படையினரும் மேற்கொண்டு வருகின்றனர். யுனிசெப் நிறுவனம் உள்ளூரில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களை இணைத்து வெடிபொருள் விழிப்புணர்வுச் செயற்பாட்டைமேற்கொண்டு வருகின்றது.

இதில் தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமை ஒழுங்குகள் அவ்வப்போது மாற்றம் செய்யப்படும். 2005ஆம் ஆண்டுக்கான திட்டம் இவ்வருடப் பிற்பகுதியில் மேற்கொள்ளப்படும். நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கலட்டி, வண்ணார் பண்ணை போன்ற பகுதிகளில் கிணறுகளில் வெடிபொருட்கள் இருப்பதாகவும் அவைஎடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. கிணறுகளில் வெடிபொருள் அகற்றுவது கடினமானது. அதற்கான வியூகங்களை அமைத்து இரண்டு மாதங்களில் அவைஅகற்றித் தரப்படும் எனவும்,

இது போன்ற 147 கிணறுகள் இருப்பதாகவும் வெடிபொருள் அகற்றும் பிரிவினர் தெரிவித்தனர். அந்தவகையில் கலட்டிப் பகுதிக் கிணறுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இப்போதைய திட்டம் 2006 ஆம் ஆண்டு உயர் பாதுகாப்பு வலயத்துக்குவெளியிலுள்ள பகுதிவெடிபொருட்களை அகற்றி வைக்கும் ஏற்பாட்டுடன் தான் போய்க்கொண்டிருக்கிறது. மக்களின் தேவைக்கேற்ப வெடிபொருட்கள் அகற்றும் பணிநடைபெறும்எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி கூட்டம் யாழ் மாவட்ட மேலதிக அரசஅதிபர் சிவசுவாமி தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டுப்பிரிவுப் பொறுப்பதிகாரி ஆனந்தராசாமாவட்ட மிதிவெடி அகற்றும் செயலகத் தொழில்நுட்ப ஆலோசகர் ரிம் கோளர், கலோறெஸ், வெடிபொருள் அகற்றும் பிரிவைச் சேர்ந்த வலன், டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவைச் சேர்ந்த வோல்ட் ஆகியோர் உடபடப்பல்வேறுபட்டவர்களும் கலந்துகொண்டனர். (லோ.செ)

## ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானைப் பிரதேச பாடசாலைகளில் ஆங்கில பாடத்தை பயிற்றுவித்து வரும் ஆசிரியர்களுக்கான ஆற்றலை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் ஈடுபட்டுவருகிறது.

அந்த வகையில் மேற்படி பிரதேச பாடசாலைகளில் ஆங்கில பாடத்தைப்போதிக்கும் ஆசிரியர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டுப்பயிற்சிகளை மேற்படி நிறுவனம் வழங்கி வருகிறது.

இவ்வாறு தொடர்ந்து வழங்கப்பட்டுவரும் பயிற்சிகளில் தகுதிவாய்ந்தவர்களால் கற்பித் தல் தொழில் நுட்பங்கள் தொடர் பாக பயிற்சிகளும் ஆலோச னைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (33)

## சாவகச்சேரிப் பகுதியில் வேகக்கட்டுப்பாடு தேவை

யாழ்.கண்டிவீதியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதல் அமிர் தாம்பிகை வித்தியாலயம் வரையான பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை அமுற்படுத்த வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்ற பொதுமக்களுக்கும்-பொலிசாருக்குமிடையிலான நட்புறவுக் கழகங்ககளை ஏற்படுத்துவது தொடர்பான சந்திப்பிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளதாலும்; சாவகச்சேரி நகரம் அமைந்திருப்பதாலும் வாகனங்களின் வேகக்கட்டுப்பாட்டை அமுற்படுத்துமாறு கோ[illegible]பட்டுள்ளது அத்துடன் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலைய[illegible]ரிலிருந்து திரும்பும் மாணவிகள் மீது இம்சைகளைப் புரியும் இளைஞர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரப்பட்டுள்ளது. (27)

## ஆசிரியர் போட்டிப் பரீட்சை யூலை-24 நடைபெற ஏற்பாடு

(அலுவலகசெய்தியாளர்)

வடகிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் தகுதிகாண் ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் யூலைமாதம் 24ஆம் திகதி நடாத்தப்படவுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். மேற்படி போட்டிப்பரீட்சையில் தோற்றவுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளிற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் 9 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும் எனக் கிளி[illegible]ாச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (சோ,து)

## நாவற்துறையில் நிலைகொண்டுள்ள இராணுவம் வீதியால்போகும் பெண்கள் மீது சேஷ்டை

### -பொதுமக்கள் கூட்டமைப்பினரிடம் முறையீடு-

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறை வடக்கு பிரதேசத்தில் உள்ள வீதி ஓரக் காவலரண்களில்நிலை கொண்டுள்ள படையினர் வீதிகளில் நடமாடும் பெண்கள் மீது சேஷ்டைகளைப் புரிவதாக அப்பகுதி மக்கள் தமிழ்த் தேசியகூட்டமைப்பினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ் குடாநாட்டில் இடம் பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்படிபகுகளில் காவலரண்களை நிறுவி தங்கியிருக்கும் படையினர் அப்பகுதிகளில் உள்ள வீதிகளால் நடமாடும்பெண்களைக் கேலி செய்தும், தகாதவார்த்தைகளைக் கூறி ஏசிவருவதாகவும் இதனால் தமக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தே இம்முறைப்பாட்டை அப்பகுதி மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளனர். (33)

## வீதி விபத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ஆடியபாதம் வீதியில் கல்வியங்காட்டுச் சந்தியை அண்மித்த பகுதியில் ஆட்டோ ஒன்றும் துவிச்சக்கரவண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் சென்ற இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் நாயன்மார்கட்டைச் சேர்ந்த ர.ரஞ்சித்குமார் என்பவரே காயமடைந்தவராவார். (33)

## பெண்களின் சுயதொழில் முயற்சியை மேம்படுத்தும் திட்டம் நடைமுறையில்

யாழ்.மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் மன்றத்தினால் பெண்களின் சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிகப்பட்டு வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து வரும் ஏராளமான பெண்கள் சுய கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் தொழில் மேம்பாட்டு அபிவிருத்திகளைக் கவனத்தில் கொண்டே வர்த்தகக் கைத்தொழில் மன்றம் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. இத்திட்டநடைமுறைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவென பெண் முயற்சியாளர்களை ஒன்றிணைக்கும் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (33)

## தொழில்சார் பயிற்சிப்பட்டறை

(அலுவலகசெய்தியாளர்)

I.O.M நிறுவனத்துடன் REERDO நிறுவனம் இணைந்து நடாத்திய தொழில்சார் பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் வெண்புறா நிறுவன கேட்போர் கூடத்தில் காலை 9.30-5.30 மணிவரை நடைபெற்றது.

மேற்படி பட்டறை இனங்காணப்பட்ட 30 பயனாளிகளிற்கு நடைபெற்றது. தொழில்சார் பயிற்சி தொடர்பாக I.O.M, REERDO, T.R.O ஆகிய நிறுவனங்களின் செயற்பாடு தொடர்பாக நிறுவனத்தின் பிரதிநிதிகள் எடுத்து விளக்கினர்.

அத்துடன் இவர்களைத் தொழில்சார் பயிற்சிக்குத் தகுதிநிலை அடையும் பொருட்டு அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளாரின் உளவளத்துறை அ[illegible]ினர் பல்வேறுபட்ட செயல்முறைகள் மூலம் இதன் முக்கியத்[illegible]த்தை எடுத்து இயம்பினர். இறுதியில் தொழில்சார் பயிற்சி நெறிக்கான விண்ணப்பதாரிகளை இ[illegible]ங்கண்டு அவர்கள் அப்பயிற்சியை[illegible]த் தொடங்குவதற்கான ஒழு[illegible]கள் மேற்கொள்ளப்பட்டன. (சீ)

# ம.ஐ.சு.முன்னணியின் செயற்பாடுகளால் ரணில் எழுச்சியுற்று வருகிறார்

"ரணில் விக்கிரமசிங்க தண்ணீருக்கு அடியில் இருக்கும் பந்துக்கு சமமானவர். அந்தப் பந்தை தண்ணீருக்கு அடியில் ஒளித்து வைத்தாலும் அது எப்படியாவது தண்ணீரின் மேல் மட்டத்திற்கு வந்துவிடும்" இவ்வாறு ம.ஐ.சு.மு தலைவர் ஒருவர் கூறினார்.

ஏன் அப்படி கூறுகிறீர்கள்? என்று ம.ஐ.சு.மு. உறுப்பினர் ஒருவரைப் பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபொழுது அவர் கூறியதாவது, கடந்த வாரம் தென்பகுதி



சிங்களப் பத்திரிகைகளில் ரணிலின் தலைமைப் பீடத்திற்கு எதிராகக் கட்சியில் பலம் வாய்ந்த பெரும் புள்ளிகள் அவரை விமர்சனம் செய்தனர். நாங்கள் நினைத்தோம் ஐக்கிய தேசியக் கட்சியில் பெரிய குண்டு ஒன்று வெடித்துக்கட்சி சிதறிப்போகும் ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்திலிருந்து தூக்கி எறியப்படுவார் என்று, அவ்வேளையில் பாராளுமன்றத்தில் ஜாதிகஹெல உறுமய பௌத்தபிக்கு தாக்கப்பட்டார். இத்தாக்குதலினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் பெரிய குண்டு ஒன்று வெடித்து ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக்கட்சி வைத்த குண்டிலிருந்து காப்பாற்றியுள்ளது என ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின் தலைவர் கூறியுள்ளார்.

ஹக்கீம் அரசாங்கத்துடன் இணையப் போகிறார் என்று நினைக்கும் பொழுது குமாரிகுரே என்ற ஒரு குப்பையை அரசாங்கம் வெளியிட்டு ஹக்கீமை ரணிலின் மடியில் தள்ளிவிட்டது. அதேபோல் ஆறுமுகம் தொண்டமான் அரசுடன் இணையப்போகிறார் என நினைக்கும் பொழுது தொண்டமானின் பாதுகாப்பை அரசாங்கம் நீக்கியதால் தொண்டமானும் ரணிலின் மடியில் வீழ்ந்துவிட்டார். தயானந்த தேரோவைத் தாக்கியதால் ஹெல உறுமய கட்சியும் ரணிலின்அருகில் போய் அமர்ந்து கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளை எதிர்த்து வந்த ஹெலஉறுமயக்கட்சியும் ரணிலின் முயற்சியால் விடுதலைப்புலிகளுடன் கதைப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது. இப்பொழுது ஐக்கியதேசியக் கட்சி மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு முயற்சிகள் செய்யவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்களே விக்கிரமசிங்க நாட்டின் தலைவராக வேண்டும் என நினைத்து இச்சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகின்றது. அப்படியான "புத்திசாலிகள்" தற்பொழுது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து செயற்பட்டு வருகின்றனர்.

சந்திரிகா அரசாங்கம் பாராளுமன்றத்தில் நடத்திய அடிதடிகளால் ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்களின் உட்பூசல்களையும், குரோதங்களையும் மறந்து தற்பொழுது ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றி வலம்வரத் தொடங்கியுள்ளனர். ரணில் இல்லாமல் இந்தப் பந்தை அடிபது மிகக் கடினம் அவரே இந்தப்பந்தை அடிபதற்கு தகுதியானவர் என ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறிவருகின்றனர்.

ஆளும் கட்சியினர் கூறுவதுபோல் ரணில் தண்ணீருக்கு அடியில் மூழ்கடித்துவிடக் கூடிய பந்தல்ல. அந்தப் பந்து எப்படியும் மேல்மட்டத் திற்கு வந்துவிடும். 1993 ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதிக்கு முன்னதாக அப்போதைய சனாதிபதி ஆர்.பிரேமதாச அவரின் ஆதரவாளர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ரப்பர் பந்துபோல் தண்ணீருக்கு அடியில் தள்ளி அமிழ்த்தினர். கடைசியில் ரணில் நாட்டைவிட்டு வெளியேறினார். பின் 1993ஆம் ஆண்டு பிரேமதாசவின் கொலைக்குப் பின் ரணில் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேவைப்பட்டது. அவர் தலைவராக்கப் பட்டார்.

1994 காமினி திசாநாயக்கவின் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து பின் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் அங்கத்தவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் தண்ணீருக்குள் தள்ளிவிட்டு காமினி திசாநாயக்கவைச் சுற்றிவலம் வந்தனர்.

1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின் ரணில்விக்கிரமசிங்க சாதாரண ஒரு பாராளுமன்ற அங்கத்தவராகவே இருந்தார். காமினி திசாநாயக்கவின் மரணத்தின்பின் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைமைப் பீடத்திற்குத் தேவைப்பட்டார். அவர் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரானார். 2001ஆம் ஆண்டு தேர்தலின் பின் ரணில் கட்சியிலிருந்து ஓரம் கட்டப்பட்டார். காமினி அத்துகோரளைக் கட்சியின் அங்கத்தவர்களை ஒன்றிணைத்து ரணில் விக்கிரமசிங்கவை ஒரு ரப்பர் பந்துபோல் நீருக்கடியில் அமிழ்த்தினார். அப்பொழுது ஹக்கீம் சந்திரிகாவின் அரசில் இருந்து விலகியபின் சந்திரிகா அரசாங்கத்தைக் கலைப்பதற்கு ரணிலின் தலைமை தேவைப்பட்டது. சந்திரிகாவின் அரசாங்கத்தைக் கவிழ்த்து ரணில் மீண்டும் பிரதமரானார்.

2004ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசை ரணிலினால் காப்பாற்ற முடியாமல் போயிற்று. கட்சி தோல்விகண்டது. கட்சியினுள் ஆதரவைப்பெற வேண்டுமானால் ரணில் விக்கிரமசிங்கவை விமர் சனம் செய்ய வேண்டும் எனக் கட்சியினுள் அபிப்பிராயங்கள்



ஏற்பட்டது. இன்று எதிர்க் கட்சியின் பலத்தைப் பாராளுமன்றத்தில் நிரூபித்து சந்திரிகாவின் அரசைக் கவிழ்ப்பதற்கு ரணிலின் தலைமைத்துவம் ஐக்கிய தேசிய முன்னணியினருக்கு தேவைப்பட்டுள்ளது. இப்படி இவர் கட்சியில் நிராகரிக்கப்படுவதும் மீண்டும் கட்சிக்கு தேவைப்படும் பொழுது தலைமைப் பீடத்தை ஏற்பதற்கு அவரைச்சுற்றி வலம் வருவதும் தற்பொழுது வழமையாகிவிட்டது.

அடுத்த இலக்கு ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி யாவதா? இரண்டு மாதங்களுக்கு முன்னதாக ரணில் விக்கிரமசிங்க மக்களால் நிரா கரிக்கப்பட்ட ஒரு தலைவர். உண்மையில் ரணில் மக்களால் நிராகரிக்கப்பட்டாரா? 2001ஆம் ஆண்டு சந்திரிகா எப்படி மக்களால் நிராகரிக்கப்பட்டாரோ, அதேபோல் 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவும் நிராகரிக்கப்பட்டார்.

மீண்டும் ரணிலின் தலைமைத்துவம் மக்களுக்குத் தேவைப்படுகின்றது. ஆனால் இப்போது சந்திரிக்காவின் அரசாங்கம். ரணிலின் சரித்திரம் முடிந்துவிட்டது. மக்கள் அவரை நிராகரித்து விட்டனர். மூன்றில் இரண்டு பங்கு மக்களின் செல்வாக்கு தமக்கு உண்டு, மக்கள் நாட்டில் பெரும் புரட்சி செய்து ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்து ஆட்சியைத் எமக்குத் தந்துள்ளார்கள் எனத் தம்பட்டம் அடித்துக்கொள்கிறார். 2004ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளை நாம் பார்க்கும் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றியை நாங்கள் மிகக் குறைவாகவே கணிப்பீடு செய்கின்றோம். 2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலையும் 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் 5.5 இலட்சம் வாக்குகள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு கிடைக்கவில்லை அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 2004இல் ஜே.வி.பியுடன்

- உப்புல் ஜோசப்பர்னாந்து (லங்காதீப)
தமிழில் - அ. சக்திவேல்

இணைந்து பெற்ற 78923 வாக்குகள் 2001ஆம் ஆண்டு ஐ.தே.மு. பெற்றதைவிட சற்று அதிகமாகும்.

ஜே.வி.பியும் சுதந்திரக்கட்சியும் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிராக நாட்டில் வேலை நிறுத்தங்கள், நாட்டில் உள்ள தொழிலாள வர்க்கத்தினரைத் தூண்டி விட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், அரச ஊடகங்களின் எதிர்ப்பிரச்சாரம் மேலும் இராணுவ, பொலிஸ் உயர் மட்ட உதவிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து சந்திரிக்கா தனது நிறைவேற்று அதிகாரத்தின் முழுப்பலத்தையும் பிரயோகித்து 2004ஆம் ஆண்டு தேர்தலில் 2001ஆம் ஆண்டு தேர்தலை விட 78923 மேலதிகமான வாக்குகளையே பெற்றுள்ளார். இந்த வெற்றி ஒரு கேலிக்கூத்ததாக அமைந்துள்ளதென்பது எங்களின் கணிப்பீடாகும் இவை யாவும் சுதந்திரக் கட்சித்தலைவிக்கும் ஜே.வி.பி தலைவருக்கும் நன்றாகத் தெரியும். இதனால் ரணிலின் ஐக்கிய தேசியக்கட்சியை நாட்டில் இல்லாதொழித்து விட்டோம் என்று கூட்டு முன்னணி தற்போது கூக்குரல் எழுப்புவது அவர்களின் அரசியல் பல்யீனம் என்பதை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். இது சந்திரிகா அம்மையாரின் அரசியல் கோமாளித்தனமாகும்.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை விட 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 5% வீதமான வாக்குகள் குறைந்துள்ளது. கம்பகா மாவட்டத்தில் 3%மான வாக்குகளும், கண்டி மாவட்டதில் 2%மான வாக்குகளும் நுவரெலியா மாவட்டத்தில் 3% சதவீதமான வாக்குகளும் 2001ஆம் ஆண்டு தேர்தலை விட 2004ஆம் ஆண்டு தேர்தலில் சந்திரிகாவின் கூட்டு அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளன. இவர்கள் வடகிழக்கைத் தவிர்ந்த மாத்தளை, கண்டி, அம்பாந்தோட்டை, குருணாகல், புத்தளம், அனுராதபுரம், பொலநறுவை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளனர். 2004ஆம் ஆண்டு கூட்டு முன்னணி அரசு பெற்ற வாக்குகளை விட 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசியகட்சி பெற்ற வாக்கு வீதம் அதிகமானதாகும் அதாவது ஐக்கிய தேசியக் கட்சிக்கு அம்பாந்தோட்டை மாவட்டத்தைத் தவிர்த்து இலங்கையில் ஏனைய மாவட்டங்களில் அமோக வாக்கு வீதம் கிடைத்தன பொலநறுவை, மொனராகலையிலும் கணிசமான வாக்குளை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க தருணம் பார்த்து எழும்புவார். அந்த எழுச்சி ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணிக்குப் பெரும் வீழ்ச்சியை உண்டு பண்ணும் கூட்டு முன்னணியின் சரித்திரத்தை பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும் .

# அரசாங்க ஊழியர்களுக்கான சீரான இடமாற்றக் கொள்கை

-அடுத்த ஆண்டு அமுல்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான சீரான இடமாற்றக் கொள்கை ஒன்று அடுத்த ஆண்டு தொடக்கம் அமுல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கையின் விதிமுறைகளை கடுமையாக அமுல் செய்வதற்கு அமைச்சர் அமரசிறி தொடங்கொட அங்கீகாரம் வழங்கியுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மாகாண மட்டத்தில் இடமாற்ற சபைகளை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், இது பற்றி அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கு விளக்கிக் கூறும் கலந்துரையாடல் சமீபத்தில் பொது நிர்வாக அமைச்சில் நடந்த தாகவும் கூறப்படுகிறது.

இடமாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் அரசாங்க ஊழியர்கள் 'எதிவரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும். இடமாற்றங்களைப் பெற்ற ஊழியர்கள் வேலைத தலங்களுக்கு சமுகமளிக்காது விட்டால் விலகியவர்களாகவே கருதப்படுவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

# தேர்தல் விதிமுறைகளை மீறிய 11 வேட்பாளர்களுக்குப் பிணை

## ஆஜராகாத ஒருவருக்குப் பிடியாணை

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் பொலிசாரால் குற்றம் சுமத்தப்பட்ட 11 மாகாணசபை வேட்பாளர்கள் கடந்த திங்களன்று கொழும்பு மஜிஸ்ரேற் முன்னிலையில் ஆஜராகினர்.

இவர்கள் ஆளும் ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியினதும், ஐக்கியதேசியக்கட்சியினதும் வேட்பாளர்கள் ஆவர் .இவர்களை தலா 25.000 ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் மன்றில் ஆஜராகாத அரச கட்சி வேட்பாளர் ஒருவருக்கு எதிராகப் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்தார். (32)

# 2 ஆவது ஆண்டு நிறைவில் — அளம்பில் திலீபன் மருத்துவ சேவை

முல்லை நகர் முடிவில், மணலாறு பிரதேசமதில், இதயபூமி பகுதியிலே, அளம்பில் என்னும் கிராமத்திலே, தியாக தீபம் திலீபன் அண்ணனின் சல கூடம். என்பன கூட அற்ற நிலையில் இச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றால் அளம்பில் கிராமத்திற்குக் கட்டி வழங்கப்பட்ட



திற் கொண்டும், வைத்தியசாலையின் தூரத்தைக் கருத்திற் கொண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளால் 2004-02-21 ஆம் திகதி அம்புலன்ஸ் வண்டி ஒன்று அன்ப ளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்க தாகும். இதன் மூலம் பல்லாயிக்கணக் கான மக்கள் நன்மையடைந்து கொண்டிருக்கின்றனர். இவ் அம்புலன்ஸ் வாகனம் வந்தபின் உடுப்புக்குளம், குமுழமுனை கிராமங் களுக்கும் வாரத்தில் ஒருநாள் நடமாடும் சேவை நடத்தப்படுகிறது. மேலும் இந்த வைத்திய சேவையைச் சிறப்பிக்கும் முகமாக அனைத்துக் கிராம மக்களும், பொது அமைப்புக்களும் உதவி புரிந்து வருகின்றனர். இச்சேவை போற்றக்கூடிய சேவையாக அனைத்து மக்களாலும் உணரப்படுகின்றது. இதன் சேவையின் அடிப்படையில் சேவை பற்றிய புள்ளி விபரத்தை முன்வைக்கின்றோம்.



வைத்தியர் போராளியாக இருத்தல் இரவுபகற் சேவையாக, இச்சேவை

நினைவாக தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனைக்கமைய 2002 ஆம் ஆண்டு ஆனி மாதம் 24 ஆம் திகதி "தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை" தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டது.இம் மருத்துவ நிலையத்திற்கு வைத்தியராக சிறப்பு மருத்துவப் போராளி திருமதி செவ்வானம் வசந்தன் அவர்கள் நியமிக்கப்பட்டு சேவைசெய்து வருகிறார் அந்தக் காலத்தில் (அரச வைத்தியசாலை புதுக்குடியிருப்பில் இயங்கிய காலம். இதன்தூரம் கிட்டத்தட்ட 28கி.மீ தொலைவில் இருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.) அளம்பிலைச் சூழவுள்ள கிராமங்களான நாயாறு, செம் மலை, குமுழமுனை, ஆறுமுகத்தான்குளம், முறிப்பு, பூதன்வயல், உடுப்புக்குளம், உப்புமாவெளி என்பனவற்றில் வசித்து வந்த மக்கள், வைத்தியசாலை இன்றி அவலப்பட்டு அலைந்த அக்காலத்திலே தான் மேற்கூறப்பட்ட கிராம மக்களுக்காக இம்மருத்துவ சேவையானது உருப்பெற்றது.

ஆரம்பகாலத்தில் மருத்துவ சேவைக்குத் தேவையான அடிப்படை வசதிகளாக கருதப்படுவனவற்றில் கட்டடம், கிணறு, மல ஒன்றுகூடல் மண்டபத்தையே தனது இருப்பிடமாக மாற்றிக் கொண்டது. இதன் பின்னர் அரசசார்பற்ற நிறுவனத்தின் உதவியின் மூலம் கிணறு, மலசலகூடம் என்பன கட்டப்பட்டது. இருந்த போதிலும் நிரந்தரக் கட்டடம் கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது.

மேலும் நாட்கள் செல்லச் செல்ல நோயாளர்களினது வரவும் நூறு இருநூறு என்ற வண்ணம் அதிகரித்துச் செல்கின்றது. இந்த அதிகரிப்பால் அவசரசிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை அரச வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத வைத்தியர், தனியார் மோட்டார் சைக்கிள்களையும், வாகனங்களையும் நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலும் இம்மருத்துவசேவை திறம்பட ஆற்றப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் பின்னர் அளம்பில் பிரதேசத்தில் உள்ள மக்கள் தொகையைக் கருத்

அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையில் சிகிச்சை பெற்ற நோயாளர் விபரம் (2002-06-24-2004-06-18)

| நோய் | மொத்தம் |
|---|---|
| ஊர்காய்ச்சல் | 5947 |
| சுவாச வழித் தொற்று | 5311 |
| மலேரியா | 371 |
| உயர் குருதியமுக்கம் | 859 |
| சலரோகம் | 130 |
| ஏனையவை | 17537 |

மேலே உள்ள மருத்துவ சேவைப்பட்டியலை அவதானிக்கும் போது மொத்த நோயாளர்களாக 30155 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் என்னும் போது இதன் சேவை மிக மகத்தானது என்பது சந்தேகத்திற்கு. இடமில்லாது உள்ளது.மேலும் இதன் சிறப்புக்கள் என்னும் வகையில் அமைந்திருத்தல், கட்டுக்கோப்பான தியாக மனப்பாங்கான உதவியாளர்கள், அவசர நோயாளர்கள்ள இடமாற்றம் செய்யும் அம்புலன்ஸ் சேவை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் இச்சேவையை ஆற்றிவருகின்ற மருத்துவசேவை நிலையத்தை மென் மேலும் சிறப்புறச் செய்ய அனைத்துப் பிரதேச வாழ் மக்களையும், பொது அமைப்புக்களையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் ஈராண்டை நிறைவு செய்யும் அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை மென்மேலும் வளர்ச்சிப் பாதையில் வீறுநடைபோட அனைத்து உள்ளங்களும் வாழ்த்தி நிற்கின்றோம்.

**தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை அபிவிருத்திக் குழு.அளம்பில்**

## அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கோரி
# யாழ்.பல்கலை வவுனியா வளாக மாணவர் 22-ஆம் திகதி முதல் விரிவுரைகளைப் புறக்கணிப்பு

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் தமது நீண்டகால அடிப்படைப் பிரச்சினைக் குத் தீர்வுக்காணக்கோரி நேற்று முன் தினம் முதல் விரிவுரைகளை முற்றாகப்புறக்கணித்து வளாக நிர்வாகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளிற்கான தீர்க்கமான பதில் கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். "25.05.2004 அன்று எமது மாணவர்களிற்குள்ள அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமான ஒரு மகஜர் எங்களால் வளாக முதல்வரிற்கு வழங்கப்பட்டது. அத்தோடு அதற்கான தீர்வினை வழங்குவதற்கு குறிப்பிட்ட ஒரு காலக்கெடுவும் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அக்காலக்கெடு போதாது என துணைவேந்தர் கருத்துக்களை முன்வைத்தபோது அதற்கான காலக்கெடு நீடிக்கப்பட்டு கடந்த 20ஆம் திகதி வரை வழங்கப்பட்டு இருந்தது. எனினும் அக்காலக் கெடுவிற்குள் எமக்கு சாதகமான பதில் கிடைக்காததால் நாங்கள் 22.06.2004 முதல் எமது எதிர்ப்பு நடவடிக்கையினை ஆரம்பித்து சாதகமான பதில் கிடைக்கும் வரை தொடர்ந்து நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்" என வவுனியா மாணவர் ஒன்றியம் தெரிவித்தது. (21)



கரைதுறைப்பற்றுப் பிரதேசச் செயலகத்தினை வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (படம்-சகீலா)

# ஐம்பது பண்ணையாளருக்கு கால்நடை பயிற்சி வகுப்பு

கால்நடைப்பண்ணையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த 19 ஆம் திகதி வவுனியா மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்றது.

இவ் வகுப்பில் கால்நடைகளுக்கு வருகின்ற நோய்கள், மற்றும் நோய்க்காரணிகள் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 50 பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பிற்கான நிதியுதவியினை F.A.O நிறுவனத்தினர் வழங்கினர். கனகராயன்குளம் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வைத்தியரின் தலைமையில் மேற்படி பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதில் கால்நடை போதனாசிரியரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்டச் செயலாளரும்.விலங்கு வேளாண்மைத்திட்ட இணைப்பாளரும் கலந்துகொண்டனர்.

## இன்று தேர்த்திருவிழா

கரைச்சி புளியம்பொக்கணை அருள்மிகு நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா 15/6/2004 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழா நடைபெற்று இன்று காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை காலை 10.00 மணிக்கு தீர்த் வமு நடைபெறும் (14)

# நிகொட் உதவியில் உருவான இரு மாடிக் கட்டடம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

நிகொட் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப் பெற்ற முருகானந்தா மகாவித்தியாலயத்தின் இருமாடிக் கட்டடம் நேற்று முந்தினம் நண்பகல் 12 மணியளவில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக் கப்பெற்றது.

பாடசாலை முதல்வர் க. மதுரநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக இடம்பெற்ற மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தேசியக் கொடியினைத் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கட்டடத்தின் பெயர்ப்பலகையினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் திரைநீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து புதிய இருமாடிக் கட்டடத்தினை நிகொட் திட்ட பணிப்பாளர் லங்காநேசன் சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் கருத்துரைகள் இடம்பெற்றன. கிளி. வலயக்கல்விப் பணிப்பாளர், கிளிமாவட்ட அரச அதிபர்,தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர், நிகொட்திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்

நிகொட் திட்டப் பணிப்பாளர் லங்காநேசனுக்கு முருகானந்தா பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் செ.சிவப்பிரகாசம் புதிய பாடசாலைக் கட்டடம் பொறிக்கப்பட்ட கேடயத்தினை நினைவுப்பரிசாக வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் நிகொட் நிறுவன பிரதிப் பணிப்பாளர்.கிளிமாவட்ட பிரதிப்பணிப்பாளர்,மாணவர் அமைப்புத்தலைவர்,கிளி.மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர். (சோ,து,14)

# பகிரங்க ஏலவிற்பனை

கரைதுறைப்பற்று பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் அரிசியாலையில் இயக்கிய(பேக்கி சன் 135) உழவு இயந்திர உதிரிப்பாகம் கழட்டிய நிலையில் பகிரங்க ஏலவிற்பனை தண்ணீரூற்று தலைமைக் காரியாலயத்தில் 10.07.2004ஆம் திகதி காலை 10.00 மணியளவில் மேற்கொள்ளப்படவிருப்பதனால் அன்றைய தினம் ஏலவிற்பனையில் பங்கு கொள்வோர். தவறாது சமுகமளிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகை ரூபா 500\- செலுத்தல் வேண்டும்

குறிப்பு:- உழவு இயந்திரத்தைப் பார்வையிட விரும்புவோர் தண்ணீரூற்று சங்க தலைமைக்காரியாலயத்தில் கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

(சி-9736) **பொதுமுகாமையாளர்.**


# மாணவர் மட்டத்தில்நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோர்

(அலுவலக செய்தியாளர்)

82ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்டப்பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, சித்திரப்போட்டி, வினாவிடைப் போட்டிகளில் முதன்நிலை பெற்ற மாணவர்களினதும், பாடசாலைகளினதும்பெயர்விபரம்பின்வருமாறு

**.பேச்சுப்போட்டி**ஆண்டு 10-11 தி.சிறீரஜீவன் கிளி/இந்துக்கல்லூரி,ஆண்டு 12-13 சி. பிரசாத் கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம்.

**கட்டுரைப்போட்டி** ஆண்டு 10-11 மோ.சுதர்சினி கிளி/பாரதி வித்தியாலயம், ஆண்டு 12-13 பா. கோமளா கிளி/ வட்டக் கச்சி மகா வித்தியாலயம்.

**சித்திரப்போட்டி**

ஆண்டு 10-11 ம. கஜரூபி கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம், ஆண்டு 12-13 செ.ரதீசனா கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்.**வினாவிடைப்போட்டி**

நாலுபேர் கொண்ட குழு சி.பிரசாத், க.ஜெனனி, அ.அயன்சன், அ.கோசலா கிளி/முருகானந்தா மகாவித்தியாலயம். (சோ.து)


# நட்டாங்கண்டல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

## வருடாந்த பொங்கல் உற்சவம்

மேற்படி பொங்கல் உற்சவம் தாரண வருடம், ஆனி மாதம், 11ஆம் நாள் (25.06.2004) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆராதனைகள் நடைபெற்று இரவு நிகழ்வாக யாழ்.ஐங்கரன் இசைக்குழுவினரின்

**"வசந்த ராகங்கள்"**

நிகழ்வும் நடைபெறும் என்பதனை அம்பாள் அடியார்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
நட்டாங்கண்டல்.

(சி-9858)

# தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப்பணி



**சிவநகர்-கிளிநொச்சி ஒரு நேரப் பேருந்துப் பணி 26.06.2004 ஆம் நாளிலிருந்து இரு நேரப் பணியாக நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.**

**நேர ஒழுங்கு**

**சிவநகர் – கிளிநொச்சி**

| சிவநகர் | உருத்திரபுரம் | கிளிநொச்சி |
|---|---|---|
| காலை 07.00 | 07.30 | 08.15 |
| பகல் 12.30 | 01.00 | 01.45 |

**கிளிநொச்சி – சிவநகர்**

| கிளிநொச்சி | உருத்திரபுரம் | சிவநகர் |
|---|---|---|
| காலை 10.30 | 11.15 | 11.45 |
| மாலை 04.30 | 05.15 | 05.45 |

**முகாமையாளர்,**
**தமிழீழ போக்குவரவுக் கழகம்,**
**பேருந்துப்பகுதி, கிளிநொச்சி.**

(4736)

# கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

## -: நான்காம் நாள் :-

- கண்ணிவெடிகள் மனிதரைக் கொல்லவோ அல்லது முடமாக்கவோ காரணமாயிருக்கும்.
- மனித நடமாட்டத்தைத் தடுப்பதற்காகவே கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.
- யுத்தம் இல்லையென்றால் கண்ணிவெடி இல்லையென்பது அர்த்தமல்ல.
- அடையாளம் காணப்பட்ட இடங்களில் மட்டுமே பாதுகாப்பு வேலிகள் இடப்பட்டுள்ளன.
- ஏனைய இடங்கள் அடையாளம் காணப்படவில்லை அல்லது வேலியிடப்படவில்லை.
- எச்சரிக்கைக் குறியீடுகளும் அறிவிப்புப் பலகைகளும் ஆபத்தைக் குறிக்கின்றன.
- அபாய அறிவிப்புக்களையோ பாதுகாப்பு வேலிகளையோ அகற்ற நினைக்காதீர்கள்.
- ஏதேனும் சேதம் ஏற்பட்டிருந்தால் கிராமத்தலைவரிடமோ, கண்ணிவெடி அகற்றும் பிரிவினரிடமோ, வெண்புறா நிலையத்திடமோ தெரியப்படுத்துங்கள்.
- உதவியை நாடும் இடங்களை நீங்களும் அறிந்து கொள்வதுடன் மற்றையவர்களுக்கும். சொல்லி வையுங்கள்

**யுனிசெவ் வெண்புறா–வன்னி**

(சி.9737)

# இந். பாராளுமன்றத் தேர்தல் முடிவே தமிழ் மொழியை செம் மொழியாக்கியது

## - தி.மு.க தலைவர் கருணாநிதி

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளே தமிழ்மொழி செம்மொழி யாவதற்கு பிரதான காரணமென திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளையே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் சமுதாயத்தில் அரசியல் வாதிகள் மட்டுமன்றி அனைவரும் விமர்சிக்கப்பட வேண்டியவர்கள் எனவும் அரசியல் என்பது விளங்கப்பட வேண்டியதல்ல வாழ்வோடு இணைந்த ஒன்றென அவர் மேலும் தெரிவித்துள்ளார். பல தடவை பலராலும் வாக்குறுதி அளிக்கப்பட்டு செம்மொழியாக்கப்படாத தமிழ் மொழி மக்களவைத் தேர்தலில் தமிழக மக்கள் அளித்த தீர்ப் பால் இப்போது செம்மொழியாகிறதென அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சமஸ்கிருதம் போல் தமிழ்மொழி செத்தமொழியாகவோ, சாகப்போகிற மொழியாகவோ இல்லை யெனக் கூறிய அவர் கடைசித் தமிழன் இருக்கின்ற வரை தமிழ் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# பொடோ சட்டம் இரத்தானால் போராட்டம் நடத்துவோம்

## பா.ஜ. கட்சி எச்சரிக்கை

(புதுடில்லி)

காங்கிரஸ்க் கூட்டணி அரசால் பொடோ சட்டம் இரத்து செய்யப்பட்டால் அதனை எதிர்த்து நாட்டில் போராட்டம் நடத்தப்போவதாக பாரதிய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.மும்பையில் நடைபெறுகின்ற பா.ஜ. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வெங்கையா நாயுடு இதனைத் தெரிவித்துள்ளார்.

# கூட்டணி அரசில் இணைவதில்லை ம.தி.மு.க.வின் முடிவில் மாற்றமில்லை

## வை.கோ. தெரிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுடன் சேர்வதில்லையென தமது கட்சியின் நிலையில் மாற்றமெதுவும் இல்லையென்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வை.கோ கூறியுள்ளார்.

மூன்று வார கால அமெரிக்கப் பயணத்திற்குப் பின்பு நாடு திரும்பிய வை.கோ சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துக் கூறுகையில் பொடா சட்டத்தை ரத்து செய்யும் வழிவகைகள் குறித்தும் மத்திய அரசு ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்ட அவர் இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார்.

இருப்பினும் வை.கோவிற்கு எதிராக பொடா வழக்கு உள்ள போதிலும் அமெரிக்காவிற்குப் பயணம் செய்ய சென்னை நீதிமன்றம் அவருக்கு அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நக்சலைட்டுக்கள் போர்நிறுத்தம்

ஆந்திராவில் அரசிற்கு எதிராகத் தாக்குதல்களில் ஈடுபட்டுவந்த நக்சலைட் தீவிரவாதிகள் நேற்று போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இவர்கள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் இணங்கியுள்ளனர். மக்கள் போர்க்குழு எனச் செயற்பட்டு வருகின்ற இவர்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக தாக்குதல்களில் ஈடுபட்டுவந்தனர்.

இதனிடையே ஆந்திராவில் புதிதாகப் பதவியேற்றுள்ள காங்கிரஸ் கடந்த 05 நாட்களுக்கு முன்னர் நக்சலைட்டுக்கள் போர்நிறுத்தத்தை அறிவித்ததுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.இதனை ஏற்ற நக்சலைட்டுக்கள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர்.

## பணிநிலை வெற்றிடம்

முல்லை. மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில்

1) நிர்வாக உத்தியோகத்தர்,
2) வெளிக்கள உத்தியோகத்தர்

ஆகிய பணிநிலைகளுக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கல்வித்தகைமை:- ஆகக் குறைந்தது க.பொ.த. (உயர்தரம்)
* சுமாரான ஆங்கில அறிவும், அரச சார்பற்ற நிறுவனங்களின் முன் அனுபவமும் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள் 05.07.2004 இற்கு முன்பாக, தலைவர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், முல்லை. மாவட்டம், புதுக்குடியிருப்பு. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(4658) தலைவர்.

## 07ஆம் ஆண்டு நினைவலைகள்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 26 | | 24 |
| 08 |  | 06 |
| 1974 | | 1997 |

### கப்டன் ஜெயச்சந்திரன்

சிதம்பரபிள்ளை(சிவநாதன்)

சம்பவம்:-பெரியமடு இராணுவத்தினருடனான தாக்குதல்

செந்தமிழ் க் கவிதை மண்ணைக் காக்க
பொங்கியெழுந்தாய் சந்திராவே.
நொந்து போய் உள்ளோர் எல்லாம்
உன்பணி தொடர உள்ளார்.

முகவரி:-
புலிமச்சிநாதகுளம்,
மாங்குளம்.

தகவல்:-
சி.சுதாசீலன்
(போராளி)

(4738)

## பணிநிலை வேண்டுகை

நிதித்துறை ஆளுகைக்குட்பட்ட நிறுவனமொன்றிற்கு பாதுகா வலர் பணி நிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. இப்பணியில் இணைய விரும்புவோர் கீழ்க்குறிப்பிடப்படும் நாளில் இடம்பெறும் நேர்முகத் தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**கல்வித்தகைமை:-**

08ஆம் ஆண்டில் தேறியிருத்தல் வேண்டும்

**அகவை:- 25-40**

**கொண்டுவரப்பட வேண்டிய ஆவணங்கள்:-**

1) குடும்பப்பதிவு அட்டை
2) அடையாள அட்டை
3) கல்விச்சான்று

**நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-**

மருதம் வாணிபப்பணிமனை
(காக்காகடைச்சந்தி, யாழ்சாலை,
கிளிநொச்சி)

காலம்:- 2004.07.03
நேரம்:- காலை 10.00மணி

*சம்பளம் நேரில்பேசித் தீர்மானிக்கப்படும்.*

மருதம் வாணிபம்,
கிளிநொச்சி.

(4737)



கல்வயல் - பெருங்குளம்அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## மஹா கும்பாபிஷேகம்

**மஹா கும்பாபிஷேகம் 25.06.2004 வெள்ளிக்கிழமை பகல் 9.31 மணி முதல் 10.00 மணிவரை**

எண்ணைக்காப்பு சாத்தல் 24.06.2004 வியாழக்கிழமை பகல் 12.00 முதல். புதிதாக அமைக்கப்பட்ட எழுந்தருளி வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானுக்கும் கும்பாபிஷேகம் நிகழும். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் 15 தினங்கள் நடைபெறும். தேவஸ்தான கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ க. ச. சோமாஸ்கந்த குருக்கள் .

குறித்த நேரத்தில் நிகழ்வுகள் நடைபெறும். பகல் அன்னதானம் நடைபெறும். விஷேடகுறிப்பு: முருகனுக்குப் பால் காப்பு சாத்தல் இடம்பெறும்.

விஷேடமேளக்கச்சேரி: தென்மராட்சியின் தலைசிறந்த நாதஸ்வர மேதை கானவாரிதி கே. எம். பஞ்சாபிகேசன் குழுவினரும், சத்தியநாதன் குழுவினரும்.

நிகழ்ச்சிகள் யாழ். ஒலிபரப்பில் நேரடியாக ஒலிபரப்பு செய்யப்படும்

கல்வயல் பெருங்குளம்,
சாவகச்சேரி

இங்ஙனம்
விநாயகர் அருள்வழிநிற்கும் ஆலயபரிபாலன சபை

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்...

சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்
இல. 45, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2226059

மிகவிரைவில் சாவகச்சேரி நகரில்
சிவா நகைமாடம்

சாரங்கா நகைமாடம்
இல.157/1, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். T.P- 021-2222480

(சி.9860)

– பரபரப்படையும் ஐரோப்பிய கால்பந்துப் போட்டி –

# இத்தாலியின் நம்பிக்கை தகர்ந்தது

# சுவீடன்-நெதர்லாந்து கால் இறுதிக்கு முன்னேறின

யூரோ கிண்ண கால்பந்தாட்ட போட்டித் தொடரில் நேற்று முன்தினம் குழு Cக்கான முக்கியமான இரண்டு போட்டிகள் நடைபெற்றன.

போத்துக்கல்லின் இமாவோச் விளையாட்டரங்கில் நடைபெற்ற கடைசிலீக் போட்டியில் இரு அணி களும் ஒன்றை ஒன்று மோதின.

இறுதியில் சுவீடனும் டென்மார்க் கும் அபாரமாக விளையாடித் தலா 2 கோல்களைப் போட்டுப் போட்டி ்யைச் சமப்படுத்திக் கொண்டன. இதனால் இத்தாலியின் கால் இறுதிக்கான வாய்ப்பு கைநழுவிப் போனது.





இதேவேளை ஊ பிரிவின் மற்றொரு ஆட்டத்தில் இத்தாலி -பல்கேரிய அணிகள் மோதின.

-இதில் அதிக கோல்களைப் போட்டு கால் இறுதிக்கு தகுதிபெற வேண்டும் என்ற நம்பிக்கையுடன் கலந்து கொண்ட பலம் வாய்ந்த இத்தாலிக்கு ஆரம்பத்திலேயே பல்கேரிய வீரர்கள் அதிர்ச்சியைக் கொடுத்தனர். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் முதல் பாதியில் இத்தாலிய அணி கோல் போடுவதற்கு கடுமையாகப் போராடிய போதும் 45 ஆவது நிமிடத்தில் பல்கேரியாவின் மார்க்ரிச்சட்கோ கோல் ஒன்றைப் போட்டு இத்தாலிக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

ஆனால் ஆட்டத்தின் இரண்டாவது பாதி தொடங்கி 3 ஆவது நிமிடத்தில் இத்தாலியின் பரோடா கோல் ஒன்றை போட்டார்.

இதன் மூலம் போட்டி சமநிலை ஏற்பட்டு விறுவிறுப்பு அடைந்த நிலையில் ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் இத்தாலி வீரர் அல்பான்சா காஸ்ரோ கோல் ஒன்றை அடிக்க 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் இத்தாலி வெற்றி பெற்றது.

C பிரிவின் இத்தாலி, சுவீடன், டென்மார்க் ஆகிய மூன்று அணிகளும் தலா ஐந்து புள்ளிகளைப் பெற்றாலும் அதிக கோல்களை அடித்ததன் அடிப்படையில் சுவீடனும் டென்மார்க்கும் கால் இறுதிக்குத் தகுதிபெற்றன.

ஒரு வேளை சுவீடன்-டென்மார்க் போட்டி 1-1 என்ற கோல் அடிப்படையில் சமப்படுத்தப் பட்டிருந்தால் இத்தாலி கால் இறுதிக்கு நேரடியாக தெரிவாகியிருக்கும்.



சுவீடன் அணி மூன்று போட்டிகளில் விளையாடி 5புள்ளிகளை பெற்றது. 8கோலை பெற்றதன் மூலம் இலகுவாக கால்இறுதிக்கு தெரிவாகியது.

டென்மார்க் அணி 3 போட்டிகளில் 5 புள்ளிகளை பெற்றது. 4 கோல்களை போட்டிருந்தது 2கோல்களை வாங்கியிருந்தது. இத்தாலி மூன்று போட்டிகளில் 5 புள்ளிகள் 3 கோல்களை அடித்திருந்தது. இதன்மூலம் டென்மார்க்கிடம் கோல் அடிப்படையில் இத்தாலி தோல்வி அடைந்தது.

# இங்கிலாந்தின் ஒளிக்கீற்றாக இளம் வீரர் வேய்ன் றூனி



பயிற்சியில் ஈடுபடும் றூனி

'அடுத்தடுத்து எப்படி கோல் அடித்தேன் என்பது புரியாததாக உள்ளது. முடிந்த அளவிலான திறமையை வெளிப்படுத்தி நாட்டுக்கு பெருமை சேர்ப்போம் என்ற நிலையில் தான் களம் இறங்கினேன். ஆனால் சக வீரர்கள் அற்புதமாக ஆடி எனக்கு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தனர்' என வெற்றிக்குப் பின்னர் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார் இங்கிலாந்தின் 19 வயதாகும் றூனி.

'வீரர்கள் ஆடிய விதத்தை வார்த்தையால் சொல்லமுடியாது' எனப் பெருமிதம் தெரிவித்தார். இங்கிலாந்து அணியின் ஸ்விஸ் பயிற்சியாளர் ஸ்வென் கோரன் எரிக்சன்.

'பி' பிரிவுக்கான லீக் சுற்றுக்களின் முடிவில் இங்கிலாந்து 2 வெற்றி ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகளைச் சேர்த்து இரண்டாம் இடத்தைப் பெற்று கால் இறுதிக்கு முன்னேற உறுதுணையாக அமைந்தது றூனியின் முதல் பாதியில் காயத்துக்காக ஆட்டத்தில் வழங்கப்படும் கூடுதல் நேரத்தில் கோல் அடித்த (46ஆவது நிமிடம்) வேய்ன றூனி 68 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடித்து இங்கிலாந்து ரசிகர்களின் இதயத்தில் இடம் பிடித்தார்.

# போத்துக்கல்லுக்கெதிரான போட்டியில் நாங்கள் நெருப்பாக இருப்போம்

## டேவிட்பெக்காம்



றூனியை அணைக்கும் பெக்காம்

போத்துக்கல் அணிக்கெதிராக இன்று நடைபெறவுள்ள முதலாவது கால்இறுதிப் போட்டியில் நாங்கள் நெருப்பாக இருப்போம் என்று இங்கிலாந்து அணித்தலைவர் டேவிட் பெக்காம் தெரிவித்துள்ளார்.

அந்தப் போட்டியில் மிகவும் சிறப்பாக விளையாடுவோம் எனவும் கடந்தகாலங்களில் நாங்கள் பல அனுபவங்களை பெற்றுள்ளோம் அதாவது முக்கியமான நேரத்தில் பல முக்கியமான தோல்விகளைச் சந்தித்துள்ளோம் அவ்வாறு தோல்விகளைச் சந்திக்காது இலகுவாக வெற்றியைப் பெற்றுக்கொள்வோம்.

அதேபோன்று இந்த தொடரில் அதிக கோல்களைப்பெற்ற 18 வயது கொண்ட இளம் வீரர்றூனியின் சிறந்த பங்களிப்புடன் நாங்கள் வெற்றிபெற்றுக் கொள்ளமுடியும்.

கடந்த போட்டியில் அவரின் பங்களிகப்புடன் வெற்றியினை பெற்றிருந்தோம் அவரை இளவயது உள்ளவராக கருதமுடியவில்லை 18வயது என்று சொல்லமுடியவில்லை சாதாரணமான ஒரு உதைபந்தாட்ட வீரர் எந்நளவுக்கு சிறப்பாக விளையாடுவாரோ அந்தளவுக்கு றூனே விளையாடுகின்றார்.

இதன் மூலமாக எங்களது மிகச்சிறந்த அணியை கொண்டு போத்துக்கல்லை மிக இலகுவாக வெற்றி பெற்றுக்கொள்வோம் என்று டேவிட் பெக்காம் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்காவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் கிளென் மெக்ராத் பிரதான பங்குவகிப்பார்

## -சிறிலங்காவின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ்

சிறிலங்கா அணிக்கெதிராக அடுத்தமாதம் நடைபெறவுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலியாவின் சிரேஷ்ட பந்து வீச்சாளர் கிளொன்மெக்ராத் பிரதான பங்கு வகிப்பார் என சிறிலங்காவின் வேகப் பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் தெரிவித்துள்ளார்.

டார்வினில் நடைபெறவுள்ள டெஸ்ட்போட்டிக்கு முன்னதாக மெக்ராத் தனது பந்து வீச்சு ஆற்றலை மீளப்பெற்றுக்கொள்வார் என சமிந்தவாஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கணுக்காலில் ஏற்பட்ட உபாதைகாரணமாக கடந்த வருடத்தின் பின் மெக்ராத் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபெற்றாது ஓய்வு பெற்றுவந்தார்.

எவ்வாறெனினும் சிறிலங்கா அணிக்கெதிராக இன்று ஆரம்பமாகவுள்ள நான்கு நாள்போட்டிக்கான வடக்குப்பிராந்திய முதலமைச்சர் அணியில் மெக்ராத் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

34வயதுடைய மெக்ராத் கடந்த வருடம் யூலைமாதம் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டிகளிலேயே கடைசியாக விளையாடியிருந்தார்.

மெக்ராத் போன்ற சிறந்த பந்து வீச்சாளர் நீண்டகால இடைவேளைக்குப் பின்னர் கிரிக்கெட் அரங்கிற்கு வருகைதந்து முன்னைய ஆற்றலை மீள வெளிப்படுத்துவது சுலபமன காரியமல்ல என வாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் பல வெற்றிகளுக்கு கடந்த ஒரு தசாப்தகாலமாக மெக்ராத் பெரும் பங்காற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.






விம்பிள்டன் மத்திய விளையாட்டரங்கில் நடைபெற்ற பெண்களுக்கான தனி ஆட்டத்தின் போது நடப்புச் சம்பியன் செரீனா வில்லியம் ஒரு சந்தர்ப்பத்திற்காக சீனாவைச் சேர்ந்த ஜைசிங்கை அணுகும் காட்சி.

# இங்கிலாந்து ரசிகர் குத்திக்கொலை

இங்கிலாந்து - குரோஷிய அணிகளுக்கிடையே லிஸ்பனில் திங்கட்கிழமை நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து 4-2 என வெற்றி பெற்றது.

அதை மகிழ்ச்சியுடன் குதித்துக்கொண்டாடிய 27 வயது இங்கிலாந்து ரசிகரை குரோஷிய ரசிகர் கத்தியால் குத்தினார். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அவர் உயிரிழந்தார். இதையடுத்து குரோஷிய ரசிகர் கைது செய்யப்பட்டார். இவருடைய பெயரை பொலிசார் வெளியிடவில்லை.

# முரளிதரன் மீதான சர்ச்சை தேவையில்லாதது அவர் கிரிக்கெட்டின் உச்சத்தில் உள்ளார்

## -இந்திய முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் மணீந்தர்சிங்

சிறிலங்கா சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் மீதான பந்துவீச்சு சர்ச்சை இவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்பு தேவையில்லாதது. 10 ஆண்டுகளுக்கு முன்பே இப்பிரச்சினையை எழுப்பியிருந்தால் ஒரு வேளை 'துஸ்ரா' பந்து வீச்சை அவர் மாற்றியிருக்கமுடியும் என இந்தியாவின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் மணீர்ந்தர் சிங் தெரிவித்துள்ளார். தற்போது 527 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி கிரிக்கெட்டின் உச்சக் கட்டத்தில் உள்ளார் முரளிதரன் இந் நிலையில் தேவையில்லாதது அப்பிரச்சினை எனத் தெரிவித்தார்.

முன்னாள் இந்திய கிரிக்கெட் சங்கத்தலைவர் எம்.ஏ.சிதம்பரம் நினைவாக சென்னையில் இயங்கி வரும் எம்ஏசி சுழற்பந்து அறக்கட்டளை (பவுண்டேசன்) பயிற்றுநராக முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் மணீர்ந்தர்சிங் (வயது 39) நியமிக்கப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை காலை வீரர்களுடன் தனது 13 ஆண்டுகால சர்வதேச அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார் அவர்.

பஞ்சாப், மகாராஷ்டிரம், இமாச்சல், கர்நாடகம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த 9 பேர் உட்பட 21 சுழற்பந்து வீச்சாளர்கள் முகாமில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சிக்குப்பின்னர் செய்தியாளர்களிடம் மணீர்ந்தர்சிங் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு பயிற்சி பெறுபவர்கள் அபார திறமையைக் கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் சிறந்த வீரர்களாக உருவாக அவர்களுக்கு நல்ல வாய்ப்பு உள்ளது. வீரர்கள் மனோரீதியாகவும் திடமானவர்களாகவும் இருந்தால் விரைவில் முன்னேற்றம் காண முடியும் என்றார்.

தென் ஆபிரிக்காவினர் மாதிரி கம்பியூட்டர் மூலம் கிரிக்கெட்டை பின்தொடர்வது அவசியமில்லாதது. இயற்கையான திறமையுடைய வீரர்கள் இந்தியாவில் பலர் இருக்கிறார்கள். பின்னர் எதற்கு கம்பியூட்டர் அணுகுமுறை எனக் கேள்வி எழுப்பினார்.

அவர் முதல்கட்டமாக வரும் 29ஆம் திகதி வரை சென்னையில் பயிற்சி அளிக்கவுள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் 66 விக்கெட்டுகளையும், டெஸ்டில் 88 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ள மணீர்ந்தர், 95ஆம் ஆண்டு சர்வதேச கிரிகெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.



## சிந்தனைக்கு

நாம் ஒன்றுபட்டமக்களாக ஒரேதேசிய சக்தியாக-அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை முறியடிக்கவேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
24-06-2004

## துரோகிகள் கூட்டு!

கருணாவுடன் தனக்கு நீண்ட காலத் தொடர்பு இருப்பதாகவும், அவர் தேசிய நீரோட்டத்தில் இணைய விருப்பம் தெரிவிப்பதால், அதற்கான முயற்சியில் தான் ஈடுபடத் தயாராகி வருவதாகவும், ஈ.பி.டி.பி. குழுவின் தலைவரான டக்ளஸ் தேவானந்தா கூறியிருப்பதானது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. டக்ளஸ் தேவானந்தாவின் கொள்கைக்கோ அன்றிக் குணநலனுக்கோ இது மாறுபாடானதல்ல.

கருணா விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டபோதே கருணாவை ஆதரித்தவர் டக்ளஸ் தேவானந்தா. அவர் “கருணா குற்றம் இழைத்திருப்பினும், அவரை நாம் ஆதரிக்கின்றோம்.” எனத் தெரிவித்ததன் மூலம் தமது, குழுவினதும் கொள்கையையும் குண நலத்தையும் வெளிப்படுத்தியவர். அதாவது, குற்றவாளிகளினதும், துரோகிகளினதும் கூடாரம் தமது கட்சி என்பதையும் வெளிப்படையாகவே இனம் காட்டியவர்.

தமிழ் இன விரோதக் குழுக்களின் தேசிய நீரோட்டத்தில் இணைதல் என்பதன் அர்த்தமானது இனத்தைக் காட்டிக்கொடுத்து பிழைப்பு நடத்துதல் என்பதே ஆகும். அதாவது, இன அழிப்பிற்குத் துணைபோய் - அன்றி இனத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு தமது சுயதேவையை, அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதாகும்.

டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களின் தலைமையிலான இன விரோதக் குழுக்கள் கடந்த காலத்தில் தேசிய நீரோட்டத்தில் பங்கேற்றல் என்ற ரீதியில் மேற்கொண்ட நடவடிக்கையானது தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவித்ததும், சிறிலங்கா ஆயுதப் படையினருடன் இணைந்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டதுமேயாகும்.

இத்தகையதொரு செயற்பாட்டிற்கு கருணாவையும் வருமாறு டக்ளஸ் தேவானந்தா விடுக்கும் அழைப்பே தேசிய நீரோட்டத்தில் பங்கேற்க வருமாறான அழைப்பாகும். ஆனால், கருணாவிடம் டக்ளஸ் தேவானந்தா இத்தகையதொரு அழைப்பை விடுத்துள்ளமையானது, ஒன்றும் தவறானதல்ல. ஏனெனில், கருணாவிற்கு இனியுள்ள ஓரிரு தெரிவுகளில் இதுவும் ஒன்று.

அதாவது, கருணா எதிர்காலத்தில் தேசிய நீரோட்டத்தில் கலத்தல் என்ற ரீதியில் தனித்தோ அன்றி டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் சேர்ந்தோ அரசியல் என்ற ரீதியில் காட்டிக் கொடுப்புக்களையும், இனவிரோத நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் ஒரு வழி.

இரண்டாவதாக, வெளிப்படையாக அரசியல் என்ற போர்வையில் இன விரோத நடவடிக்கைகளில் ஈடுபடாது சில சிறிய குழுக்கள் செயற்படுவது போன்று சிறிலங்கா இராணுவம், புலனாய்வுத் துறையுடன் இணைந்து காட்டிக்கொடுத்தல், இனப்படுகொலைகள் மற்றும் அழிவு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் எனத் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

இவற்றில், கருணா தற்பொழுது எந்த வழியைத் தேர்தெடுக்கப் போகின்றார் என்பதே கேள்வியாகும். கருணாவின் நடவடிக்கைகள் குறித்து அவருடன் இருந்து இறுதியாக வெளியேறியவர்களின் தகவலின்படி தற்பொழுது கருணாவின் குடும்பம் மட்டுமே அவருடன் உள்ளது. அதாவது, அவர் தப்பியோடும்போது தன்னுடன் அழைத்துச் சென்ற சிலரைக்கூடப் பராமரிக்க விரும்பவில்லை. இறுதியில் அவரது நெருங்கிய சகாவாக இருந்த வரதன்கூடக் கைவிடப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆகையினால், கருணா டக்கிளஸ் தேவானந்தா போன்று அரசியல் என்றரீதியில் இனவிரோத நடவடிக்கைக்குத் தயாராவரா என்பது குறித்து கேள்வி எழும்புகின்றது. மாறாக, சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையுடன் இணைந்து இன அழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது போல் உள்ளது. தற்போதைய அவரின் நடவடிக்கைகள் இதனையே வெளிப் படுத்துபவையாகவுள்ளன.

ஏனெனில் இத்தகையதொரு நடவடிக்கைக்கு அவருக்கென ஆளணிகள் தேவையில்லை. ஆளணிகளை வழங்க சிறிலங்கா புலனாய்வுத்துறையும், அதனுடன் ஏற்கனவே செயற்பட்டுவரும் தமிழ் இன விரோதக் கும்பல்களின் ஆளணியும் உண்டு. மேலும், சிறிலங்கா புலனாய்வுத்துறைக்குத் தேவை தமது அழிவு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்பதற்கானதொரு பெயர் மட்டுமே.

ஆனால், கருணா இதில் எதனைத்தனது தெரிவாகக் கொண்டாலும் அதைப் பற்றிச் சிங்கள பேரினவாத சக்திகளுக்கு கவலையில்லை. இதேபோன்றே டக்ளஸ் தேவானந்தாவிற்கும் கருணாவின் துரோகத்தனம் எதுவாக இருப்பினும், அவருக்குச் சந்தோசமே. ஆயினும், கருணாவை “தேசிய நீரோட்டம்” என்ற ரீதியில் அரசியல் கலந்த துரோகத்தனத்திற்குள் இணைத்துக் கொண்டால், வடக்கில் தன்னைப்போல் கிழக்கிலும் ஒரு துரோகியை உருவாக்கி தமிழர் உரிமைப் போரைச் சிதைத்துவிடமுயற்சிக்காலம் என்பது அவரது குறிக்கோளாக இருக்கலாம். இதுவே கருணாவிற்கு டக்ளஸ் [illegible]கும் ஆதரவிற்கும் விடுத்த அழைப்பிற்கும் காரணமாகலாம்.

# தமிழர் தாயக அபிவிருத்தியை அரசு முன்னெடுக்குமென்ற நம்பிக்கையில்லை

### - யாழ். மாவட்ட பா. உ. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

சிறிலங்கா அரசினால் தமிழர் தாயகப் பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் திருப்திகரமாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற தேசிய-எழுச்சிப் பேரவையினருக்கான ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்ப்பாணப்பிரதேச இணைப்பாளர் மு.கிருஸ்ணசாமி தலைமையில் நடைபெற்ற இவ் ஒன்றுகூடலில் யாழ்.நல்லூர் அரசியல் துறை கோட்ட பொறுப்பாளர் திருமறவன் உட்பட போராளிகள், பொதுமக்கள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சிங்கள பேரினவாதிகள் தமிழ் மக்களின் அமைதிவாழ்விற்கான தீர்வினை முன்வைப்பார்கள் என்ற நம்பிக்கையை இழந்ததினாலேயே தமிழீழத் தேசியத் தலைவர் அணியில் திரண்டு தமிழினம் இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வெற்றி கண்டுள்ளது.

இவ்வாறு பெற்ற வெற்றிகள் மூலம் தமிழினம் தனது பலத்தை நிரூபித்துள்ளதனால் புலிகளுடன் பேசி தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பேரினவாத அரசு முன்வந்தது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு தருவதாகக் கூறிப் பேரினவாத அரசு வீசும் மாயவலையில் சிக்கிக்கொள்ளாது தொடர்ந்தும் தலைவர் வே.பிரபாகரனின் அணியில் திரண்டு நின்றாலே எமது பிரச்சினைகளுக்கான தீர்வினை அரசு நியாயமானதாக முன்வைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

# ஊழல் மோசடிகள் தொடர்பாக 1100 முறைப்பாடுகள் தேக்கம்

ஊழல் மோசடிகள் மூலம் பணம் சம்பாதித்த குற்றச்சாட்டுக்கள் உட்பட ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவுக்கு இதுவரை 1100 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் அவை விசாரிக்கப்படாமல் தேக்க நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இம்முறைப்பாடுகளுக்குள் பல தரங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சிக்கியிருப்பதாகவும் இம்முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

# சிறிலங்கா சனாதிபதி பாதுகாப்பு பிரிவின் முன்னாள் தலைவருக்குப் பிடியாணை

(கொழும்பு)

சனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் முன்னாள் தலைவர் நிகால் கருணாரட்ணவிற்கு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் ஆதரவாளர்களை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள இவர் இதுதொடர்பான வழக்கு சென்ற திங்கள் நடைபெற்ற போது அதற்கு சமூகமளிக்காததை அடுத்தே கண்டி உயர் நீதிமன்ற நீதியாளரால் இப்பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவருடன் வழக்கில் சமூகமளிக்காத மற்றொருவரான மத்துமா பண்டாரவிற்கும் இதேபோன்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# பேருந்து மோதி இருமாணவிகள் உட்பட மூவர் பலி அதிர்ச்சியில் ஒருமாணவியின் தாயார் மரணம்

பொல்காவல மாவட்டம் இரத்மல்கொட எனும் இடத்தில் பாடசாலை மாணவிகள் இருவர் உட்பட 3பேர் பேருந்து மோதியதில் உயிரிழந்துள்ளனர். குருணாகல் நகரில் உள்ள பிரதான வீதியொன்றில் பாடசாலை செல்லும் வீதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வேகமாக வந்த பேருந்து இவர்கள் மீது மோதியதால் இவர்கள் அவ்விடத்திலேயே பலியாகினர். பாடசாலை மாணவிகளை அழைத்துச் சென்ற 38 வயதுடைய பெண்மணி குருநாகல் வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டுப் பின்னர் கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலே உயிரிழந்துள்ளார்.

இவர்கள் மீது மோதிய பேருந்தின் உரிமையாளரையும், சாரதியையும் குருநாகல் பொலிசார் கைது செய்துள்ளனர். பேருந்து வீதியில் ஓடுவதற்குரிய நிலையிலே இருக்கவில்லையெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. உயிரிழந்த மாண விகளில் ஒருவர் தரம் 5உம் மற் றையவர் தரம் 11இலும் கல்வி கற்றவர்களாவார்கள்.

இதேவேளை உயிரிழந்த இரண்டு மாணவிகளில் ஒருவரின் தாயார் சம்பவத்தைக் கேள்வியுற்ற அதிர்ச்சியில் உயிரிழந்துள்ளதாகத் தெரியவருகிறது.

### விழிப்புணர்வுக் கருத்தரங்கு

உலக சுற்றுச் சூழல் தினத்தையொட்டி கண்டாவளைப் பிரதேச மட்டத்திலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு பிரதேச செயலாளர் தலைமையில் எதிர்வரும் சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு கிளி/தர்மபுரம் ம.வி மண்டபத்தில் நடைபெறவுள்ளது இக்கருத்தரங்கில் துறைசார்ந்த திணைக்கள தலைவர்கள் உரை நிகழ்த்தவுள்ளனர் என பிரதேச செயலர் சி.சிவசொருபநாதபிள்ளை அறிவித்துள்ளர்.(14)

# ரணில் ஊடகப் பிரிவுத்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்

(கொழும்பு)

சிறிலங்கா எதிர்க்கட்சியின் ஊடகப்பிரிவின் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சமன்அதாவுடஹெற்றி என்ற இத்தலைவர் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கினை உயர்த்துவதற்கு எவ்வகையிலும் இவர் முயற்சிக்கவில்லை எனக்குற்றம் சாட்டப்பட்டே பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

லங்காதீப பத்திரிகையின் அரசியல் ஆய்வாளரும் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பருமான உபுல்ஜோசப் பெர்ணான்டோ எதிர்க்கட்சி ஊடகப்பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக ஆங்கில நாழிதழ் ஒன்றின் செய்திக் குறிப்பு கூறுகின்றது.

# இத்தாலி செல்ல முயன்று பிடிப்பட்ட 46 பேர் இலங்கை திரும்பினர்

இலங்கையில் இருந்து நீர் கொழும்பு வழியாக இத்தாலி செல்ல முயன்று சோமாலியாவில் நிர்க்கதியான நிலையில் தவித்த 46 இலங்கையர்கள் நேற்றைய தினம் இலங்கைக்கு திரும்பியுள்ளனர். மேலும் 320 பேர் சோமாலியாவிலேயே இருக்கிறார்கள் என தெரியவருகிறது. இவ் இலங்கையர்களை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் சிங்கள இனத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

இறைச்சிக்காகவும், ‘சூப்’ செய்வதற்காக செட்டைகளுக்காகவும் 100 மில்லியன் எண்ணிக்கையான சுறாக்கள் ஒவ்வொரு ஆண்டும் வேட்டையாடப் படுகின்றன. செட்டைகளை வெட்டியெடுத்த பின்னர் சுறாக்களை உயிருடன் கடலில் வீசிவிட அவை நீந்தமுடியாமல் அமிழ்ந்தும், ரத்தப் பெருக்கினாலும் பலியாகி வருகின்றன.

# எதிர்க்கட்சிகளுக்குப் பெரும்பான்மை இருப்பின் அரசாங்கத்தை அமைத்துக் காட்டவேண்டும்

## ஆளும் கட்சியினர் சவால்

(கொழும்பு)

எதிர்க்கட்சினர் தமக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதாகக் கருதினால் அவர்கள் அரசை அமைத்துக்காட்டவேண்டும் என ஆளும்கட்சினர் சூளுரைத்துள்ளனர்.

எதிர்க்கட்சிகள் 114 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதம் பாராளுமன்ற சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து இது தொடர்பாக இக்கருத்தை அவர்கள் வெளியிட்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்வரிசை உறுப்பினரும் ஜே.வி.பி. பிரச்சார செயலாளருமான விமல் வீரவன்ச 114 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஒரு கடிதம் வழங்கப்பட்டதன்கருத்து எதிர்க்கட்சியின் ஒரு அரசை அமைப்பதென்பதல்ல எனக்குறிப்பிட்டார். முரண்பட்ட கருத்துக்களைக் கொண்ட ஹெல உறுமய, தமிழ்க்கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியன சேர்ந்து எவ்வாறு ஆட்சியமைக்கமுடியும் எனக் கேள்வி எழுப்பினர்.

# பிரிட்டிஷ் கல்வியாளர் குழு யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்

குடாநாட்டிற்கான ஒருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு பிரிட்டிஷ் நாட்டு கல்வியாளர் குழுவொன்று நேற்று முன்தினம் வருகை தந்தது.

குடாநாட்டில் ஆங்கிலக்கல்வியை விருத்தி செய்யும் வகையிலான திட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் வருகை தந்த பிரிட்டிஷ் கவுன்சில் குழு மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசாமியை யாழ்.செயலகத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியது.

எதிர்வரும் ஜூலைமாத முற்பகுதியிலிருந்து அடுத்த ஆண்டின் பெப்ரவரி மாதகால வரை யாழ். மாவட்டத்திலுள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. முதல் கட்டமாக 20 ஆசிரியர்களும் பின்னர் 240 ஆசிரியர்களும் நடாத்தப்படும் பயற்சி நெறிமூலம் 20 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பலன் அடைவரென எதிர்பார்க்கப்படுகிறது இக்குழுவில் அமிறும் லஜன் மற்றும் ஹரி ஹமாலிவர் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

# போலி ஆவணங்கள் தயாரிக்கும் நிலையம் இணுவிலில் கண்டுபிடிப்பு

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவந்த பாரிய போலி ஆவணங்கள் வழங்கும் நிலையம் ஒன்று பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொலிசாரிற்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து வலிகாமத்தின் இணுவில் பகுதியில் இயங்கி வந்த இவ் இடம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இங்கு யாழ். அரசஅதிபர், யாழ். மாவட்ட நீதவான் உள்ளிட்ட பல முக்கிய அரச அதிகாரிகளது கடிதத்தலைப்புக்கள், போலி இறப்பர் முத்திரைகள் என்பவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள முள்ளியவளை மகாவித்தியாலயம் உள்ளிட்ட யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து முன்னணிப் பாடசாலைகளும் கடிதத் தலைப்புகள் அதிபர்களினதும் பதவி இறபர் முத்திரைகள் என்பவையும் அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை யாழ். பல்கலைக் கழகம் மற்றும் பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்புப் பிரிவுகளுக்கான போலிச் சான்றிதழ்கள், மோட்டார்வாகன போலி அனுமதிப்பத்திரங்கள், நீதிமன்ற பிடிவிறாந்துப்படிவங்கள் என்பவையும் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகக் குறித்த பகுதியில் அச்சகம் ஒன்றை நடாத்தி வந்த அரியாலைப்பகுதியைச் சேர்ந்தவரான யாழ். செயலக பணியாளரொருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் தற்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் யாழ்.பொலிசார் மேலதிக விசாரணைக்காக அரச திணைக்களங்களது அதிகாரிகள் சிலரும், பாடசாலை அதிபர்கள் சிலரும் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்படலாமென மேலும் தெரிவிக்கின்றனர்.

குறித்த போலிக்கச்சேரி கடந்த பல ஆண்டுகளாக அப்பகுதியில் இயங்கிவந்தமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (27)

# ஆலயங்களில் உண்டியல்களை உடைத்த இருவர் காவல்துறையால் கைது

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் பகுதியில் இரண்டு ஆலய உண்டியல்களை களவாடிய திருடர்கள் நேற்று தமிழீழக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது கடந்த திங்கள் இரவு பரந்தன் முல்லை. வீதியில் அமைந்திருந்த அம்மன் கோயில் உண்டியலையும், பரந்தன் சந்தியில் இருந்த வைரவர் கோவில் உண்டியலையும் இரு நபர்கள் ஒரேநேரத்தில் திருடியுள்ளனர்.இத் திருடர்களை நேற்று கிளிநொச்சி காவல்துறையினர் கைதுசெய்தனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி காவல் பணிமனையின் தலைமைக் காவலர் தகவல் தருகையில் மேற்படி திருட்டு தொடர்பாக எமக்குக் கிடைத்த தகவலையடுத்து உடனடியாக செயற்பாட்டில் இறங்கினோம். எமது தீவிர நடவடிக்கையாலும் விசேடமான தேடுதல்களாலும் திருடர்களை விரைவாக இனம்காண முடிந்தது.இவர்களில் ஒருவர் வட்டக்கச்சி கட்சன்றோட்டை சேர்ந்தவரும் மற்றவர் வட்டக்கச்சி மாயவனூர் பகுதியையும் சேர்ந்தவருமாவார். இவர்கள் இருவரும் 23 வயதுகுட்பட்ட இளைஞர்கள் இதற்கு முன்னர் நடந்த பல திருட்டு சம்பவங்களோடு தொடர்புடையவர்கள் என்பதும் விசாரணையின் போது தெரிய வந்தது எனத் தெரிவித்தார்.நேற்று இவர்கள் விசாரணைகளின் பின் தமிழீழ நீதிமன்றில் மேலதிக நடவடிக்கைக்காக உட்படுத்தப் பட்டுள்ளனர்.

(ச.தீ)

# இணையதளப் பயன்பாடு குறித்து ஆரம்பப் பயிற்சி வகுப்பு

தமிழீழ மாணவர் அமைப்பினரால் இணைய தள பயன்பாடு தொடர்பானதும் இணையத்தளத்தில் தமிழ்மொழி கையாளுதல் தொடர்பானதுமான ஆரம்பப்பயிற்சி வகுப்பினை பின்வரும் நேரங்களில் பின்வரும் இடங்களில் நடாத்தவுள்ளனர். இன்று காலை 8மணிதொடக்கம் 11மணிவரை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் மாலை 12.30 தொடக்கம் 3.30 மணிவரை மல்லாவி மத்திய கல்லூரியிலும் நாளை காலை 8.00 மணி தொடக்கம் 11மணிவரை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் மாலை 2.00மணி தொடக்கம் 5.00 மணிவரை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும நடைபெறவுள்ளது. எனவே, அந்தந்த நிலையங்களுக்கருகில் உள்ள 10ஆம் தரத்திற்கு மேற்பட்ட மாணவர்களைக் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் கேட்டுக் கொள்கின்றனர். (ச)

# உந்துருளியுடன் விபத்துக்குள்ளாகி சிறுவனின் கால்முறிந்தது

கிளிநொச்சி மேற்கு உதயநகர் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த வீதிவிபத்தில் சிறுவன் ஒருவர் படுகாயமடைந் துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது நேற்று முன்தினம் கிளிநொச்சி உதயநகர் பகுதியில் வீடொன்றின் முற்றத்தில் விளையாட்டுக் கார்ஒன்றினை வைத்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் கார் வீதிக்கு மறுபக்கம் சென்றதால் அதனை எடுப்பதற்காக வீதியினைக்கடக்க முற்பட்டவேளை கிளிநொச்சியிலிருந்து அம்பாள் குளம் நோக்கி சென்றுகொண்டிருந்த உந்துருளி மோதியதில் காயமடைந்ததாகவும் இவ்விபத்தில் சிவானந்தன் நிரோசன் (வயது 07) எனும் சிறுவன் கால்முறிந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பின் நேற்று மேலதிகச் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

### அம்பாறை மாவட்டத்தில்

# புலிகள் இயக்கத்தில் இணையமுன்வந்த ஆறு சிறுவர்கள்பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைய வந்த ஆறு சிறுவர்களை விடுதலைப்புலிகள் மீண்டும் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளனர். யுனிசெவ் ஊடாக இந்தச்சிறுவர்களை நேற்று நண்பகல் விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் பொற்றேர்களிடம் கையளிததார். யுனிசெவ்வின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் பிரதிநிதி அன்ரியாஜேம்ஸ் ஊடாகவே சிறுவர்கள் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## முக்கிய கூட்டம்

யாழ். மாவட்ட சிக்கனக்கடனுதவு கூட்டுறவுசங்கங்களின் முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச்சங்கங்களின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டு புதிய தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## சர்வதேச...

புதைத்துவைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளையும் வெடிபொருட்களையும் துரிதமாக அகற்றுவதற்கு துரித நடவடிக்கைகளை அரசு எடுக்காமையை ஆட்சேபித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோசங்களை எழுப்பினர்.

இப்பேரணியின் முடிவில் கோப்பாய்ப் பிரதேசமக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளால் சிறிலங்கா சனாதிபதி சந்திரிக்கா பிரதமர் மகிந்தராஜபக்ஷ மற்றும் UNHCR யுனிசெவ் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான மகஜர்கள் கோப்பாய்ப் பிரதேசசெயலக உதவிப் பிரதேசச் செயலர் திருமதி. சாந்தசீலன் அஞ்சலிதேவியிடம் ஒப்படைக்கப்பட்டன. இதேவேளை கண்டனப்பேரணி பயணித்த வீதிப் பகுதியெங்கும் படையினர் ரோந்து நடவடிக்கைகலை மேற்கொண்டிருந்ததுடன் ஏற்பாட்டாளர்கள் தொடர்பான விபரங்களையும் பதிவு செய்துகொண்டனர். (27,33)

## வவுனியா...

எதுவும் கிட்டவில்லை.

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன்கிசோர் மாணவர்களை சந்தித்து கலந்துரையாடினார். மாணவர்கள் தமது கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடருமென அறிவித்துள்ளனர்.

## பல்கலை...

மாணவர் பேரவையினது பிரதிநிதிகளும் அனைத்து பீடங்களினதும் பீடாதிபதிகளும் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுக்களுக்கான ஒழுங்கமைப்பு பல்கலைக்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினாலும், அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர்களாலும் பல்கலை. ஆசிரியர் சங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஊழியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த ஏழு அம்சக் கோரிக்கைகள் தொடர்பாகவும் உரியநிதி நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் கொடுப்பனவுகளை ஒழுங்கு படுத்தியும் வழங்கவும் ஏற்பாடுகள் செய்ய உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதையடுத்து ஊழியர்கள் வழமைபோன்று வேலைக்கு சமூகமளிக்க உறுதியளிக்கப்பட்டது அத்துடன் இவர்கள் எந்த வகையிலும்பழிவாங்க மாட்டார்கள் என்ற உறுதிமொழியும் அங்கு வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இத்தகைய பிணக்குகள் தோன்றாமல் இருப்பதாற்காக துணைவேந்தரின் தலைமையில் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியசங்கப் பிரதிநிதிகளை உள்ளூராட்சி குழுவொன்றை நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாணவர்களினதும் சமூகத்தினதும் நன்மை கருதி பல்கலைக்கழக துணைவேந்தரும், ஊழியர்சங்க பிரதிநிதிகளும் புரிந்துணர்வுடன் விட்டுக்கொடுத்து ஒரு சுமுகநிலையை ஏற்படுத்திக் கொண்டமைக்காக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது நன்றியறிதலையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளது.

இதனிடையே நேற்றுக் இடம் பெற்ற பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட உறுதிமொழிகள் தொடர்பாகப் பல்கலைக்கழகப் ஊழியர் சங்கப்பொதுக்குழு இன்று கூடி ஆராயவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (27)


# இங்லிஷ் வேர்க் ஷொப்

(கோவிந்தன் கடைச் சந்தியருகே)



புதிய பிரிவுகள் 09-06-2004 ஆரம்பமாகிவிட்டன.

தொழில் புரிவோருக்கான

பின் மாலை மற்றும் வார இறுதி வகுப்புக்கள் விரைவில் தொடங்கும்

சிறுவர்களுக்கும் ஆங்கிலம் விரைவில்

தொடர்புகளுக்கு : நிலாந்தன்
றிச்சாட் கமம்,
வில்சன் வீதி.

(சீ-9854)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.